CONNEMARA PUBLIC LIBRARY
26 MAY 1960
MADRAS

தமிழ் வாழ்க!

துணர் ௩௫. மலர் ௨.

தமிழ்ப் பொழில்

விகாரி - வைகாசி

1959

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர் :

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

தமிழ்ப் பொழில்.

பதிப்பாசிரியர் குழு.

1. திரு. ச. சுயம்பிரகாசம், B. A., B. L., தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்; பொழிற்றொண்டர்.

2. திரு. நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.

3. பேராசிரியர் தி. வை. சதாசிவ பண்டாரத்தார்,
ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

4. சித்தாந்த கலாநிதி ஔவை. சு. துரைசாமி பிள்ளை,
பேராசிரியர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

5. வித்துவான், க. வெள்ளைவாரணனர்,
ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

6. திரு. சி. வேதாசலம், B. A., B. L.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

7. திரு. வித்துவான் ச. பாலசுந்தரம்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

உள்ளுறை

துணர் ௩௫ — மலர் ௨

		பக்கம்
1.	வள்ளுவர் கண்ட அறம் வித்துவான் திரு. வி. சச்சிதானந்தம்	33
2.	சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் சீனி. வேங்கடசாமி	39
3.	இலியத் விரிஞ்சை மு. பழநி, எம். ஏ.	42
4.	தஞ்சையில் தமிழகப் புலவர் குழு புலவர்கள் ந. இராமநாதன்—தி. பாலசுப்பிரமணியன் விழாக்குழு அமைப்பாளர்கள்	46
5.	செந்தலையைச் சேர்ந்த கல்வெட்டுகள் வித்துவான் சி. கோவிந்தராசன்	55
6.	தமிழில் தாவரம் (பிண்டி) திரு. கு. சீநிவாசன், M. Sc.	59
7.	க. த. ச. 47-ஆம் ஆண்டுவிழா நிகழ்ச்சிகள் பொழிற்றொண்டர்	61
8.	அருணாசல நிலையம் பொழிற்றொண்டர்	63

CONNEMARA PUBLIC LIBRARY
2 6 MAY 1959
MADRAS

மகிழ்ச்சி.

புதுக்கோட்டை நகராண்மைக் கழகத்தின் தலைவராகத் தொடர்ந்து
இரண்டாமுறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள
நம் சங்க ஆயுள் உறுப்பினரும், வினைக்குழு உறுப்பினருமான
திரு. க. தருமராசப் பிள்ளையவர்கள்.

CONNEMARA PUBLIC LIBRARY
26 MAY 1959
MADRAS

'அருணசல நிலயத் திறப்புவிழா' இறை வணக்கத்தின்போது எடுக்கப்பட்ட இப்படத்தில்
கட்டிட நன்கொடையாளர் திரு. அ. கு. வேலன், திறப்பாளர் முதலமைச்சர் திரு. K. காமராசர்
சங்கத்தலைவர் திரு. ச. சுயம்பிரகாசம்
ஆகியோர்களைக் காணலாம்.

தமிழ்ப் பொழில்
6 MAY 1959 MADRAS
தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯௰	மலர்
௩௩	விகாரி, வைகாசி 1959 மே, ஜூன்.	௨

"வள்ளுவர் கண்ட அறம்"

வித்துவான் திரு. வி. சச்சிதானந்தம்.

'அறம்' என்ற சொற்குப் பொருள் பல கூறுவர் ஆன்றோர். அன்ன சத்திரம் ஆயிரம் அமைத்தலே அறம் என்பர் சிலர்; ஆலயம் பதினாயிரம் நாட்டலே அறம் என்பர் சிலர்; அண்டி வந்தவர்கட்கு உண்டி கொடுத்தலே அறம் என்பர் சிலர்; இல்லை என்று இரந்தவர் கட்கு இல்லை எனது ஈதலே அறம் என்பர் சிலர். ஆனால் அருந் தமிழ் நாட்டின் சிறந்த தமிழ்ப் புலவரான திருவள்ளுவர் 'அறம்' என்ற சொல்லிற்கு 'மனத் தூய்மை' என்ற பொருளையே கூறுகின் றூர். திருக்குறள் முழுவதும் அறம் கமழ்வதை அறிஞர் அறிவர்.

அறத்தைப் பற்றிக் கூறும் பிற நூல்கட்கும், திருக்குறளுக்கும், பெரியதோர் வேறுபாடு உண்டு. போதாயனர், ஆபத்தம்பர், மனு போன்ற, வடமொழியில் அறமுறை வகுத்த பெரியோர்கள் சாதிக் கொரு நீதியாகச் சொல்லிவைத்துள்ளனர். மேலும், பிற நூல்கள் அறத்தைப் பற்றிக் கூறினால் அறத்தையே கூறிக்கொண்டு செல்லும்; மறத்தையோ, இன்பத்தையோ காணவியலாது. ஆனால் வள்ளுவர் கூறிய அறநூலிலே மறமும் உண்டு; இன்பமும் உண்டு; மாசிலாத் துறவும் உண்டு. அரசர் முதல் ஆண்டி ஈருக உள்ள அனைவர்க்கும் 'அறம்' பொதுவேயாகும். அறவழியிலே ஈட்டும் பொருளும், அற முறையிலே அனுபவிக்கும் இன்பமுமே என்றும் அழியாமல் நிற்பன என்பதை வலியுறுத்தவே அறம், பொருள், இன்பம் என வரன் முறையாகக் கூறினர் வள்ளுவர்.

எல்லா வுயிர்களினும் மேம்பட்ட நிலையுடையவன் மனிதன். "அரிது அரிது மானிடர் ஆதல் அரிது" என்றூர் ஔவையார். "மக்கள் தாமே ஆறறிவுயிரே" என்றூர் ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியனூர். உயர்திணைக்கு இலக்கணம் வகுத்த பவணந்தி "மக்கள் தேவர் நரகர் உயர்திணை" என்று உரைத்தார். இறைவனை யுணர்ந்து, இன்ப துன்பங்களை அனுபவித்துச் செம்மையான முறை யில் வாழ்க்கையைச் செலுத்துவது இம் மக்கட் பிறப்பே. இத்தகைய சிறப்புற்று மனிதன் விளங்குவது எப்போது? 'மனம்' என்ற ஒன்று செம்மையாக இருக்கும்போதுதான். எனவே மனத்தினை யுடையவன் மனிதன் எனப்பட்டான். 'மன்—இதன் எனப் பிரித்து நிலை பெற்ற

இன்பத்தை (வீடுபேற்றை) அடைவதற்குரிய வாழ்க்கையை அமைத்து வாழ்பவன் மனிதன் என்றும் கொள்ளலாம்'. சிந்திக்கும் திறம் வாய்ந்தவன் சிறப்புடையவன் ஆனன்.

உள்ளத்தால் பொய்யா தொழுகிய பொய்யில் புலவரும் உள்ளம் செம்மை யடையும் வழிகளையே தாமியற்றிய குறளில் கூறிப் போந்தார் எனல் குற்றமாகாது. காற்றினும் கடிதிற் செல்லும் குரங்கு மனத்தை அடக்கி நிறுத்துவது - செம்மைப் படுத்துவது எப்போது? அங்கிங் கெனுதபடி எங்கும் பிரகாசமாய் நீக்கமற நிறைந்துள்ள இறைவனுற்றலை உணரும் போது, கெடுக்கவும், கெட்டார்க்குச் சார்வாய் மற்றுங்கே எடுக்கவும் வல்ல இயற்கையாம் மழையின் திறத்தினை எண்ணும்போது, இறைவனை, இயற்கைச் சக்திகளை உணர்ந்து, இடையரு இன்பம் எய்தி, நிறை குணம் படைத்த நீத்தாரை நினைக்கும்போது, மனம் செம்மை யடைகிறது - உயர்வடைகிறது. ஆகவே தான் அறத்தை வகுத்த திருத்தகு தேவனுர் 'மனத் தூய்மையே அறம்' எனக் கூறினுர். மனத் தூய்மை யில்லாது மக்கள் பிறருக்குக் கொடுக்கும் பொருள்கள், செய்யும் செயல்கள் அனைத்தும் தம்மை ஆரவாரிக்கும் தன்மையைச் செய்வனவே யாகும் எனவும் சொல்லுகின்றுர்.

"மனத்துக்கண் மாசிலனுதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற" — என்பது குறளாகும். ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங் குறட்பாக்கட்கும் அடிப் படையாவதும் இக் குறட்பாவே யாகும்.

அறச் சிந்தனை யுடையவர்களே — அன்பும், பண்பும், ஆன்றவொழுக்கமும் உடையவர்களே—அந்தணராவார். செந்தண்மை பூண்டொழுகும் தன்மையால் 'அந்தணர்' எனப்பட்டார் என்று செந்தமிழ்ப் புலவர் செப்புகின்றுர்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ் வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்" — என்பது குறள். அறிஞர் வள்ளுவரின் கொள்கைப்படி, அண்மையில் தோன்றி மறைந்த மகாத்மா காந்தியடிகள், மறைமலையடிகள், திரு. வி. க. போன்ற பெரியோர்களையும் 'அந்தணர்' என அழைத்தல் பொருத்த மாகும். மேலும் இல்லற, துறவறத்திற்கும், பொருள் பெறுவதற்கும், இன்பம் அடைவதற்கும் மனத் தூய்மையே இருத்தல் வேண்டும் என்ற எண்ணமுடையவராய் 'அறன் வலியுறுத்தல்' என்ற அதிகாரத்தை இல்லறவியலின் முதலிலேயே வைத்திருக்கின்றுர் வள்ளுவனுர்.

இல்லறத்திற்கு மனத் தூய்மை இன்றியமையாதது என்பதைக் குறளின் துணை கொண்டு கூறுவாம். இல்லறத்தின் சிறப்பினை எடுத்துக் கூறும் வள்ளுவர் "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" எனத் தேற்றேகாரம் கொடுத்துச் சொல்லுகிறுர். இல்வாழ்க்கைக்கு

அன்பையே பண்பாகவும், அறத்தையே பயனாகவும் கூறியுள்ள திறத்தினை நோக்கின் புலவரின் உள்ளம் புலனாகும். மனம் செம்மையுடையவனே மாண்புடைய மனைவியைப் பெற முடியும்; நன்கலமாகிய நன்மக்கட் பேற்றினையும் அடைய முடியும்; அகம் நெகிழ அன்புடையவனாக - செல் விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் செம்மையுடையவனாக—இருக்க முடியும் என்று சொல்கின்றார் செந்நாப் போதார். மேலும், அன்பு கலந்து வஞ்சனையிலாத செஞ்சொற்களைச் சொல்லும்போது, காலத்தினாற் செய்த நன்றியைக் கருதும்போது, தீமை வரினும் நடுவு நிலைமையினின்றும் தவறாதிருக்கும்போது, எல்லார்க்கும் நன்றாய பணிதலை மேற்கொள்ளும் போது, உயிரினும் சிறந்த ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கும்போது, பிறன் மனை விழையாத பேராண்மை கொண்டபோது, மிகுதியால் மிக்கவை செய்தாரையும் தாம் தம் தகுதியால் வெல்லுகின்ற திறன் பெற்றபோது, உடுப்பதும் உண்பதுமின்றி ஒருங்கே கெடுக்க வல்ல அழுக்காற்றினை அகற்றியபோது, புலம் வென்ற பெரியோர் இலம் என்று விழையாத பொருளை, நலம் என்று நாமும் விரும்பாதபோது, புறங் கூறும் புன்மை நெறியைப் புறத்திலே விடும்போது, மறந்தும் பிறன்கேடு சூழுதலைத் துறந்து வாழும்போது, தாளாண்மையால் வந்த பொருளை வேளாண்மை செய்யும்போது, வறியார்க்கு ஒன்றீந்து உள்ளம் உவக்கும்போது, ஒன்றா உலகத்து உயர்ந்த புகழினை அடையும்போது, இயல்பாகவே மனம் தூய்மையாக இருத்தல் வேண்டும்—இருக்கும்—என்று எடுத்துக் கூறவும் வேண்டுமோ?

மனையறத்தே மனம் சிறிது மாறுபட்டால் நிலை பெரிதும் மாறிவிடும். கணவன், மனைவி ஆகிய இருவர் வாழும் குடும்பங்களில் ஒருவருக்கொருவர் மனம் மாறுபட்டு ஐய மனப்பான்மை கொண்டு வாழ்ந்து வருவார்களேயானால் அக் குடும்பங்கள் தானும் அழிந்து, பிறர் குடும்பங்களையும் அழித்து, ஊரையும், நாட்டையும், உலகத்தையுமே அழித்துவிடும் என்று அறையவும் வேண்டுமோ? மனத் தூய்மை யிழந்து மனையறத்தே வாழ்பவன் பிறர் பழிக்கு ஆளாக நேரிடும். எத்தனையோ குடும்பங்கள் தூய்மை யின்மையால் வாழ்க்கையில் வெறுப்படைந்து வறண்ட பாலைவனங்களாக மாறிவிட்டன; பிறர் பழிக்கும் ஆளாயின. எனவேதான் மனையற மாண்பிற்குக் காரணம் மனத் தூய்மையாகிய அறமே என்று எண்ணி,

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை—அஃதும்
பிறன் பழிப்ப தில்லாயின் நன்று"

என்று உரைத்தார் வள்ளுவர்.

மனம் தூய்மையாக இருந்தால்தான் மனம், மொழி, மெய் கடந்த முழுமுதற் கடவுளை அடைய முடியும்; துறவறத்தை மேற் கொள்ளவும் முடியும். துறவிகளின் மனம் தூய்மை பெறுவதற்குத் திருவள்ளுவர் கூறும் திறத்தினை நோக்குவோம்:—மன்னுயிரையும் தன்னுயிர் போல் எண்ணும் அருளுடையவனாக இருத்தல் வேண்டும்;

கொல்லும் தொழிலால் வந்த தின்னும் புலாலை மறுக்கவேண்டும்; உற்ற நோய் நோன்று உயிர்கட்கு உறுகண் செய்யாத தறுகண்மை யுடைய தவத்தினை அடைய வேண்டும்; வஞ்சிக்கும் தன்மையினை விட்டொழித்தல் வேண்டும்; உள்ளத்தால் உள்ளலும் தீதெனும் கள்ளத் தன்மையைக் கடிந் தொதுக்க வேண்டும்; எனைத்தானும், எஞ்ஞான்றும், யார்க்கும் மனத்தால் உண்டாகும் துன்பத்தை மடிய விடல் வேண்டும்; பிறர்க் கின்னா செய்கின்ற பேதமையைக் கைவிட வேண்டும்; ஒன்றாக நல்லதாய கொல்லாமையை நன்றாக எண்ணி மேற்கொள்ள வேண்டும்; நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும் பெருமை யுணர்ந்து யாவர்க்கும் இனிமையாய் நடந் தொழுக வேண்டும்; யான், எனது என்னும் செருக்கினை அறுக்க வேண்டும்; காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்றையும் கடிந்து உண்மையை உணர வேண்டும்; தூய்மை எனப்படும் அவாவின் மையை அறிந்து ஒழுக வேண்டும்; இருவேறு உலகத்து இயற்கை என்று எண்ணுகிற இயல்பு வேண்டும்—என்றெல்லாம் இறைவனார் துறவிகட்குக் கட்டளை யிடுகின்றார்.

வள்ளுவர் காலத்தே முடியாட்சியே இருந்தது. மக்களை நல் வழிப் படுத்த மன்னன் என்பா னொருவன் இருந்தான். மக்களும் அவன் வழி நடக்கலாயினர். "மன்னனுயிர்த்தே மலர்தலை யுலகம்" என்று மாபெரும் புலவரும் கூறலாயினர். 'அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்' என்ற செம்மறியாட்டு நெறி ஏற்பட்டது. இன்னார் இனி யார் என்று பாராது ஒப்ப நாடி ஒறுக்கும் பண்பு எப்பொழுது உண் டாகும்? மன்னன் மனத் தூய்மை யுடையவனாக இருந்தால்தான், என்பது சொல்லாமலே விளங்கும். எனவேதான் 'இறை மாட்சி' எனும் அதிகாரத்தையே இயற்றி யருளினார் இறைவனார். காட்சிக்கு எளியனாகவும், கடுஞ்சொல் இலாதவனாகவும், நெறி தவறாமல் குடி களைக் காப்பாற்றும் நற் பண்பு உடையவனாகவும் இருப்பவனே அரச னாவான் என் அறுதியிட்டுக் கூறுகின்றார்.

"முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு
இறை யென்று வைக்கப் படும்"—என்பது குறளாகும்.

மேலும், அரசன் கடைப்பிடிக்க வேண்டிய கல்வி, கேள்வி, அறிவு முதலாய கொள்கைகளையும், இன்னும் பிற சாதனங்களையும் பொருட் பால் முழுதும் கூறிச் செல்கின்றார். மனத் தூய்மையோடு, "குணம் நாடி, குற்றம் நாடி அவற்றுள்-மிகை நாடி மிக்க கொளும்" ஆட்சியே செங்கோலாட்சி என்று சிறப்பித்துச் சொல்லப்படும். செங்கோ லாட்சியால் செம்மை மிகுந்து, வசையிலா வண்பயன் பெருகும்; வறுமை ஒழிந்து உழுதொழில் சிறந்து உலகமும் முன்னேறும். அரசர், அமைச்சர், தூதுவர், ஒற்றர், நட்பினர் ஆகியோர்கட்கும் உரிய அறங்களை ஓதி வைத்துள்ளார் உயர் தமிழ்ப் புலவர். கோனாட் சிக்குரிய அறங்களைக் கூறிய வள்ளுவர் குடியாட்சிக்குரிய அறங்களை யும் கூறியுள்ளமையைக் கண்டு களிக்க முடிகின்றது.

"காதலிருவர் கருத் தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்"— என்றோதினர் ஔவையார். தகுதி வாய்ந்த ஆணும் பெண்ணும் தங்களது கருத்துக்களை ஒருவருக் கொருவர் அறிந்து கொள்வதற்குக் கருவியாக அமைவதே களவியல் முறையாகும். பெண்ணொருத்தியைக் காணும்போது அவளது உடற் கவர்ச்சியே முதலில் ஆடவன் உளத்தைக் கவர்கிறது. பின்பு உள்ளக் கிளர்ச்சி எழுகிறது. அன்பு ததும்பி இன்பத் துறையில் ஈடுபடச் செய்கிறது. பின்னர் பல்லோரும் அறியத் திருமணம் செய்து கற்பியல் வாழ்க்கையில் ஈடுபடுகின்றனர். களவு, கற்பு என இரு வாழ்க்கையையும் பெருமையுற நடத்துவதற்கு ஒத்த நலனும், ஒத்த குணமும், ஒத்த கல்வியும் இருவரும் உடையவராக இருத்தல் வேண்டுமென்று தென்றமிழிலக்கணமும் தெளிவாகக் கூறுகின்றது.

அறிவாலும், திருவாலும், அளவிலாச் செல்வத்தாலும் ஒத்த கற்பரசியைக் கைவிட்டு மாற்றாளாய மாதவியிடம் மகிழ்ந்திருந்தான் கோவலன் —எனச் சிந்தை கவரும் சிலப்பதிகாரம் செப்புகின்றது. பல நாட்களாக மாதவியிடத்தே மகிழ்ந்திருந்த கோவலன், மாதவி கடற்கரையிலே பொய்யாகப் பாடிய பாட்டைக் கேட்டு, மெய்யெனக் கருதி, மனம் வேறுபட்டுத் திரும்பினன். தன் மனைவியாகிய கண்ணகியிடம் வந்து, 'மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள்' அம் மாதவியே மலைபோன்ற செல்வம் தொலைவதற்கும் காரணம் என்று பலவாறு பழித்துப் பேசுகின்றான். கோவலன் மாதவியை இழித்துக் கூறக் காரணம் மாதவியின் உடற் கவர்ச்சிக்குத் தன் உள்ளத்தைப் பரிகொடுத்தானே தவிர, உண்மைப் பண்பாட்டை அவன் போற்றவில்லை என்பதேயாகும். எனவே தலைவன், தலைவியர் இருவரும் மனப் பொருத்தம் உடையவர்களாக இருத்தல் வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும். தன் மனைவியிடத்தே பிற பெண்ணின் உண்மைப் பெருமையைக் கூறினாலே உள்ளம் வேறுபட்டு வருந்துவதை வாழ்க்கையிற் காண்கிறோம். பரத்தையரிடத்திலே ஆடவன் சென்று விடுவானேயானால் பெண் மனம் என்ன பாடுபடும் என்று எடுத்துக் கூறலும் வேண்டுமோ? தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்வதற்குக் கூறப்படும் காரணங்களுள் 'பரத்தையர் பிரிவு' என்பதும் ஒன்றாகும்.

"பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே" என்று தொல்காப்பியம் கூறுவதினின்றும் பரத்தை மாட்டுச் செல்வதும் தங்களது பழக்கமாகக் கொண்டிருந்தனர் பண்டையோர் எனத் தெரிகின்றது. ஆனால் வள்ளுவர் வகுத்த இன்பத்துப் பாலுள் பரத்தையர்களைப் பார்க்க முடியாது; பொருளுக்காக இன்பம் கொடுக்கும் பொருட் பெண்டிர் என இழித்துக் கூறியதோடமையாது, பொருட் பாலிலேயே 'வரைவின் மகளிர்' என ஓர் அதிகாரம் வகுத்துப் பரத்தையர்களை விலக்கி விடுகின்றார். தூய்மையான இன்பத்தை மாசுபடுத்த விரும்பவில்லை வள்ளுவர். காமத்துப் பாலிலே கற்பிற்குப் பொற்பெனத் திகழும் பிரிவாற்றாமையைத்தான் கூறுகின்றாரே தவிர,

பிரிவின் பல படிகளைக் கூறினரில்லை. இன்பத்துப் பாலின் இறுதியில் 'ஊடலுவகை' என்ற அதிகாரத்தைக் கூறுகின்றார். மனம் ஒன்றுபட்ட, மாசில்லாத காதலியிடத்தேதான் ஊடல் ஏற்படுமேயல்லாது பிற பெண்டிரிடம் ஏற்படாது; ஏற்படினும் பொய்யாகவே இருக்கும். எத்தகைய முறையிலும் மாசு படிதல் கூடாது; மாண்புடைய இன்பத்தைப் பெற வேண்டும். மனத் தூய்மையாகிய அறமே அத்தகைய வாழ்விற்கு ஏற்றது என்பதை இன்பத்துப் பால் முழுவதிலும் எடுத்து இயம்புகின்றார் வள்ளுவனார்.

இதுகாறும் கூறியவாற்றால், வள்ளுவர் கண்ட அறம் மனத் தூய்மையே யாகும் என்பதும், மனம் தூய்மை பெறும் தன்மையே அறம், பொருள், இன்பம் என்ற அனைத்துப் பாலிலும் குறித்துச் செல்கின்றார் என்பதும் வெள்ளிடை மலைபோல் விளங்கும். மனம் தூய்மையாக இருந்தால்தான் மொழி தூய்மை பெறும்; மொழி தூய்மை பெற்றால் செயலும் தூய்மை யடையும். அத்தகைய மனம் படைத்தவர்கள் எண்ணுகின்ற எண்ணங்கள், திண்ணமாக நினைத்ததை அடைந்து விடும். தனி மனித வாழ்க்கையில் தூய்மையோடிருந்த காந்தியடிகளின் வாழ்க்கை உலக முன்னேற்றத்திற்கே உரிய வாழ்க்கையாக விளங்கியது என்பதை விளம்பலும் வேண்டுமோ? சமுதாயத்திலே உள்ள ஒவ்வொருவரும் திருக்குறளைப் படிக்க வேண்டும்; அறத்தை நம்ப வேண்டும்; அதனை வாழ்க்கையில் கடைப் பிடிக்க வேண்டும். படிப்போர் தொகையை விட, படித்தது போல் நடப்போர் தொகை நாட்டிலே பெருகவேண்டும். பழம் பெருமையைப் பேசுவதிற் பயனில்லை. அப் பெருமையை அன்றாட வாழ்க்கையிலே கடைப் பிடித்து ஒழுகவேண்டும்.

வள்ளுவர் வகுத்த குறளினை வேதம் என்றனர் சிலர்; முப்பால் என மொழிந்தனர் சிலர்; நீதி நூல் என நினைத்தனர் சிலர்; ஒழுக்க நூல் என ஓதினர் சிலர்; ஆன்ம நூல் என அறைந்தனர் சிலர்; வாழ்க்கை நூல் என வரைந்தனர் சிலர். ஆனால், செய்ந்நன்றி யறிதலின் சிறப்பினைக் கூறவந்த அருந்தமிழ்ப் புலவராய ஆலத்தூர் கிழார், அறிஞர் கருத்தினை அழகாகப் போற்றுவதோடு, குறளுக்கு "அறம்" என்றே பெயரிட்டு அழைக்கின்றமை அறிந்து மகிழ்தற்கு உரிய தாகும். இதோ அவ் வரிகள்!

"செய்தி கொன்றோர்க்கு உய்தி யில்லென
அறம் பாடிற்றே ஆயிழை கணவ"—புறம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

சீனி. வேங்கடசாமி.

திரு. S. வையாபுரிப் பிள்ளை அவர்கள் காலஞ்சென்றவுடனே அவர் ஆங்கிலத்தில் எழுதிய "தமிழ் மொழி, தமிழ் இலக்கிய வரலாறு" என்னும் நூல் 1956-இல் வெளியிடப்பட்டது. (History of Tamil Language and Literature, by Prof. S. Vaiyapuri Pillai, New Century Book House, Madras 2.) இந்த நூலிலே பிள்ளையவர்கள் பல தவருன கருத்துக்களை வெளியிட்டிருக்கிருர். சில செய்திகளைத் திரித்துக் கூறுகிருர் சில செய்திகளை மறைத்துக் கூறுகிருர். இந்த நூலைப் படிக்கின்ற வெளிநாட்டவர் தவருன கருத்துக்களை உண்மை எனக் கருதிக்கொள்கின்றனர். நமது நாட்டிலுங் கூடப் பலர், பிள்ளையவர்களின் பிழையான கருத்துக்களை உண்மைச் செய்திகள் என்று நம்புகின்றனர். பிள்ளையவர்கள் கூறுகிற தவருன செய்தி ஒன்றை இங்கு எடுத்துக் காட்டுவோம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பற்றி இந்த நூலில் இவர் இவ்வாறு எழுதுகிருர் :—

"இந்தக் காலத்தின் நிலமை இந்தப் பதிகங்களில் (சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரப் பதிகங்களில்) காணப்படுகிறது. ஜைன சமயத்தினுல் சைவ சமயத்துக்கு இருந்த அபாயகரமான நிலை மறைந்து போய்விட்டது. சுந்தரமூர்த்தியின் தேவாரப் பாடல் களிலே ஜைனர்களைப் பற்றிய ஒரு குறிப்புக்கூட இல்லை" (பக்கம் 110)

"The condition of the times is reflected in these Hymns. The danger to the Saivite religion from the Jains had disappeared and there is not even a single reference to the Jains in Sundarar's Hymns".

பிள்ளையவர்கள் இவ்வாறு எழுதுவது உண்மைக்கு மாருனது. உண்மைக்கு மாருனது மட்டும் அல்ல; உண்மையை மறைத்துக் கூறுகிருர். பிள்ளையவர்கள் சைவர் என்கிற முறையில் சுந்தரர் தேவாரத்தைப் படித்திருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டாலும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர் என்கிற நிலையிலாவது சுந்தரர் தேவாரத்தைப் படித்திருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டாலும், சுந்தரர் தேவாரத்தைப் பற்றி எழுதுகிறபடியால், அந்தத் தேவாரத்தைப் படித்திருக்கவேண்டும். படித்தாரோ, படிக்க வில்லையோ நமக்குத் தெரியாது. ஆனுல், சுந்தரர் தேவாரத்தைப் பற்றி ஒரு தவருன செய்தியை உண்மைக்கு மாருகக் கூறுகிருர். முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கிருர். சுந்தரர் தேவாரத் திலே ஜைனரைப்பற்றி ஒரு குறிப்புக் கூட இல்லை என்று சிறிதும் அஞ்சாமல் தைரியமாகக் கூறுகின்ருர். இது உண்மைதாஞ என்பதைச் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரத்தில் தேடிப் பார்ப்போம்.

"குண்டாடிச் சமண் சாக்கியப் பேய்கள்
கொண்டா ராகிலும் கொள்ளக்
கண்டாலுங் கருதேன் எருதேறுங் கண்ணு
நின்னல தறியேன்". (திருநாட்டியத்தான்குடி 9)

"வெற்றரைக்கற் றமணும் விரையாது
விண்டால முணுந்
துற்றரைத் துற்றறுப்பான் துன்னவாடைத்
தொழிலுடை யீர்". (பழமண்ணிப்படிக்கரை 9)

"குண்டாடுஞ் சமணரும் சாக்கியரும்
புறங்கூறுங் கொகுடிக் கோயில்".
(திருக்கருப்பறியலூர் 10)

"இருந்துண் தேரரும் நின்றுண் சமணரும்
ஏச நின்றவன்". (திருவாழ்கொளிபுத்தூர் 10)

"நமையெலாம் பலர் இகழ்ந் துரைப்பதன் முன்
நன்மை யொன்றிலாத் தேரர் புன்சமணுஞ்
சமயமாகிய தவத்தினர் அவத்தத் தன்மை
விட்டொழி நன்மையை வேண்டில்",
(திருத்தினை நகர் 9)

ஜைனரை (சமணரை) மட்டும் அல்லாமல் பௌத்தர்களையும் கூறுகிருர் சுந்தரமூர்த்திநாயனுர். தேரர், சாக்கியர் என்று பௌத்தர்களையும், சமணர் என்று ஜைனரையும் இத் தேவாரப் பதிகங்களில் கூறுவது காண்க. திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள் சமணர்களைப் பற்றி ஒரு குறிப்பும் கூறவில்லை என்று எழுதுகிருர்! மேலே ஐந்து குறிப்புகளைக் கண்டோம். இன்னும் பல குறிப்புகள் உள்ளன. அவைகளையும் காண்போம்.

"நமண நந்தியும் கருமவீரனும்
தரும சேனனும் என்றிவர்
குமணமாமலைக் குன்றுபோல் நின்று
தங்கள் கூறை ஒன் றின்றியே
ஞமண ஞாஞண ஞாண ஞோண
மென் றோதி யாரையும் நாணிலா
அமணராற் பழிப் புடைய ரோ
நமக் கடிகளாகிய அடிகளே".
(நமக்கடிகளாகிய அடிகள் 9)

இதில், சுந்தரர்மூர்த்தி சுவாமிகள் நந்திகணம், சேனகணம் முதலிய ஜைன சமயச் சங்கங்களின் பெயர்களையும், அச் சங்கங்களில் தலைமை பூண்டிருந்த ஜைன முனிவரின் பெயர்களையும் கூறுகிருர். மேலும் அவர்கள் ஓதிக்கொண்டிருந்த பிராகிருத மந்திரச் சொற்களையும் கூறுகிருர். ஆனல், வையாபுரிப் பிள்ளை அவர்களோ, சமணரைப்பற்றி ஒரு குறிப்பும் சுந்தரர் தேவாரத்தில் இல்லை என்று எழுதுகிருர் !

மேலும் சுந்தரர் தேவாரத்தைப் பார்ப்போம்.

"நன்மையொன் றிலாத்தேரர் புன்சமணும்
சமயமாகிய தவத்தினர் அவத்தத் தன்மைவிட்டு".
(திருத்தினை நகர் 9)

"குண்டாடியும் சமணாடியும் குற்றுடுக்கையர் தாமும்
கண்டார் கண்ட காரணம்மவை கருதாது கைதொழுமின்"
(திருமறைக்காடு 9)

"குண்டாடிய சமணாதர்கள் குடைச்சாக்கியர் அறியா
மிண்டாடிய வதுசெய்தது வானல் வருவிதியே".
(திருச்சுழியல் 9)

"குண்டரைக் கூறையின்றித் திரியும் சமண் சாக்கியப்பேய்
மிண்டரைக் கண்டதன்மை விரவாகிய தென்னைகொலோ"
(திருநாகேச்சரம் 10)

"மோடுடைய சமணர்க்கு முடையுடைய சாக்கியர்க்கும்
மூடம் வைத்த
பீடுடைய புலியூர்ச் சிற்றம்பலத்தெம் பெருமானைப்
பெற்று மன்றே". (கோயில் 9)

"கரியமணச் சமண் காடியாடு கழுக்களால்
எரிய வசவுணுந் தன்மையோ.........",
(முடிப்பது கங்கை 9)

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது தேவாரத்தில், ஜைனர் (சமணர்)களைப் பற்றியும், பௌத்தர்களைப் பற்றியும் இவ்வளவு குறிப்புகளைத் தருகிறார். வையாபுரிப் பிள்ளையவர்கள், சுந்தரர் தேவாரத்தில் ஒரு குறிப்புக் கூட இல்லை என்று மறைக்கிறார். தமிழாராய்ச்சித் துறை மாணவர்களுக்கு வழிகாட்டிக்கொண்டு, பல்கலைக் கழகத்தில் பொறுப்பு வாய்ந்த பதவியில் இருந்தவரின் ஆராய்ச்சி இது. பிள்ளை அவர்கள் எழுதிய நூல்களில் இதுபோன்ற "ஆராய்ச்சி"கள் பல உள்ளன. தமிழ் ஆராய்ச்சியில், "வையாபுரிப் பிள்ளை பரம்பரை" ஒன்று சென்னையில் உருவடைந்து வருகிறது. இந்தப் பரம்பரை பிள்ளை யவர்களின் போக்கைத் தழுவிச் செல்கிறது.

வையாபுரிப் பிள்ளை நல்ல பதிப்பாசிரியர். அவர் பதிப்பித்த நூல்கள் சிறந்த பதிப்புகள். அதற்காக அவருக்குத் தமிழுலகம் நன்றி செலுத்துகிறது. ஆனால், அவர் சொந்தமாக எழுதிய நூல்களைப் பற்றி விழிப்பாக இருக்கவேண்டும். அவர் எழுதிய நூல்களிலே குழிகளும், பள்ளங்களும் உள்ளன; தவறான முடிவுக்கு அழைத்துச் செல்லும் பல வழிகள் உள்ளன; என்பதை வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டியிருக்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தைப் பற்றி எவ்வாறு நேர் மாறாக எழுதியிருக்கிறார் பாருங்கள் !! பிற பின்.

இலியத் (ILIAD)

சுருக்கம்–எழுதியது

விரிஞ்சை, மு. பழநி, எம். ஏ.

முன்னுரை :–

கிரேக்க நாடும் மொழியும் உலகிலேயே மிகவும் பழைமை வாய்ந்தவை என்று போற்றப்படுகின்றன. அந்நாட்டின் நாகரிகத்தின் சாயலில்தான் மேலைநாட்டு நாகரிகங்கள் எழுந்து தழைத்தோங்கின என்பர். தொன்மையான மொழிகளுள் பொருட்செறிவும் சொல்லழகும் இலக்கியவளமும் ஒருசேரப்பெற்று விளங்குவது கிரேக்கமொழியாகும் என்று உலகம் பரவிப் புகழ்கின்றது. இலக்கிய வானத்தில் ஞாயிறென விளங்கியவர் ஓமர்[1] எனும் பெருங் கவிஞர். இவர் வாழ்ந்த காலம் கி. மு. 1050—850 ஆக இருக்கும் என்று அறிஞர் கருதுகின்றனர். இந்த ஞாயிற்றினைச் சுற்றிப் பல பெருங்கவிஞர் சுற்றிச் சுழன்றனர். இக் கவிஞர் திலகம் பெயரால் இரு பெருங் காப்பியங்கள் பல்பொருள் நிறைந்த பண்டாரங்களாய் இயங்குகின்றன. ஒன்று இலியத் என்பதாகும். பிறிதொன்று ஒதிசி[2] என்பதாகும். ஒவ்வொன்றும் 24 பகுதிகளைக் கொண்ட அருங் காப்பியங்களாகத் திகழ்கின்றன. இலியத் ஒதிசியைவிட மிக நீண்டதும் கட்டுக்கோப்பும் உடையது. திராய்[3] நகரில் நடந்த பத்தாண்டுப் போரைப் பற்றிப் பாடும் அழகுடையது. இக் காப்பியத்திற்கு இலியத் என்று பெயர் வந்த காரணந்தான் யாது? திராய் நகருக்கு இல்லியம்[4] என்ற பெயர் பண்டைக் காலத்தில் வழங்கப்பட்டு வந்தது; அப்பெயரே திரிந்து இலியத் என்ருகி இப் பழம் பெருங்காப்பியத்திற்கும் பெயராயிற்று. நெஞ்சை அள்ளும் இலியதைப் படித்துப் பரவாத மேலைநாட்டுப் புலவர் இல்லை என்றே சொல்லலாம். இக் கதையை எடுத்தாளாத, பேசாத புலவர் பெருமக்களே இல்லையெனின் பிழையாகாது. காப்பியத்திற்கு ஒரு புலவஞகிய ஓமரைப் பெற்றதால் இவ் வுலகம் புகழ் பெற்றது எனினும் இழுக்காகாது. புதுநெறி காட்டிய புலவன் எனலாம். காப்பியச் சுவை இரு காப்பியங்களிலும் தவழ்கிறது.

இலியதிற்குத் தொடர்புள்ள முந்திய கதை :—

செல்வமும் ஆற்றலும் உடைய பிரியம்[5] என்னும் அரசன் திராய் நகரை ஆண்டு வந்தான். அவனுடைய மனைவி எகூபா[6] என்பவள். அவர்களுடைய முதல் மகனின் பெயர் எக்தர்[7] என்பது. தனக்கு இரண்டாம் மகன் பிறந்து அவனலேயே திராய் நகரம் அழியும், தீக்கிரையாகும் என்று ஒரு தீக்கனவை எகூபா கண்டாள். ஆகவே யாவரும் அச்சமுற்றுத் திராயின் பக்கத்தில் உள்ள இடா[8] என்னும் மலையின்மீது, பிறந்த குழந்தையை விட்டுவிட்டு வந்தனர்.

---

1. Homer. 2. Odyssey. 3. Troy. 4. Ilium. 5. Priam. 6. Hecuba. 7. Hector. 8. Mount Ida.

அழிந்தொழியும் என்ற எண்ணம் போலும். ஆனல் இறைவன் அருளால் ஓர் அன்பு இடையன் குழந்தையை எடுத்துப் பாரிசு [9] என்று பெயர் சூட்டி வளர்த்தான். பாரிசு கட்டமைந்த மேனியும், கல்லெனத் திரண்ட தோளும் உடைய காளையானுன். இதுகாறும் அவனுக்குத் தான் யார் என்று தெரியாமல் இன்பமாய் இடையனுய் வாழ்ந்து வந்தான். இவ்வாறு இருக்கையில் பீலெசு [10] எனும் அரசனுக்கும் தீதிசு [11] எனும் கடற்றேவதைக்கும் ஒரு திருமணம் நடத்த ஏற்பாடாகியிருந்தது. தலைமைக் கடவுளாகிய சுயூசு; [12] அதனுடைய மனைவியாகிய ஈரா [13]; அறிவுத் தேவதையாகிய எதீனு [14]; காதலுக்கும் அழகுக்கும் தேவதையாகிய அப்ரொடைட் [15], ஆகிய எல்லாக் கடவுள்களும் ஒலிம்பசு [16] மலையிலிருந்து திருமணத்திற்கு வந்தன. போர்த்தேவனுன ஏரசு [17] மட்டும் வர வேற்கப் பெறவில்லை. ஆகவே ஏரசிற்குத் தணியாத கோபம். யாவரும் இருந்து விருந்துண்ணும் வேளையில் ஓர் ஆப்பிள் பழத்தை அங்கிருந்த ஒரு பலகை மீது வீசி எறிந்தது. "மிக்க அழகுடையவர்க்கு இப் பழம் உரியது" என்று அப் பழத்தின் மீது எழுதப் பெற்றிருந்தது. ஈரா, எதீனு, அப்ரொடைட் ஆகிய மூவர்க்கும் யார் அழகு என்பது பற்றிப் போர் மூண்டது. பாரிசு தான் இதற்கு முடிவு சொல்ல வேண்டும் என்று தலைமைக் கடவுளும் சொல்லிற்று. ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த பாரிசின் முன்னுல் மூவரும் சென்று சேர்ந்தனர். செல்வத்தைத் தருகிறேன், எனக்கு அந்தப் பழத்தைத் தந்துவிடு என்று ஈரா முந்திக் கொண்டு சொல்லிற்று. எதீனு அறிவைத் தருகிறேன் என்று சொல்லிற்று. உலகிலேயே மிக்க அழகுடைய ஒரு பெண்ணைத் தந்து மனைவியாக்குகிறேன் என்று அப்ரொடைட் சொல்லிற்று. இளைஞனல்லவா, ஆகவே உளம் நெகிழ்ந்து "அப்ரொடைட்"டிற்கே ஆப்பிள் பழத்தைக் கொடுத்துவிட்டான் பாரிசு. அப்ரொடைட் வென்ருள். பாரிசு யார் என்று தெளிவாக ஈரா அவனுக்குச் சொல்லிச் சென்றது. ஆகவே பாரிசு திராய் நகருக்குச் சென்றுன். அவனை அறிந்து தாய் தந்தையர் மகிழ்ந்து வரவேற்றனர். உலக அழகியாரோ! என்ற எண்ணமே பாரிசு மனத்தில் குடிகொண்டது. ஆகவே அழகிய பெண்ணைத் தேடப் புறப்பட்டான். அவனுடைய தங்கை கசேந்திரா [18] தடுத்தும் விடாப் பிடியாகக் கப்பலில் புறப்பட்டுக் கடைசியில் ச்பார்டா [19] போய்ச் சேர்ந்தான்.

•

திண்டாரியசு [20] என்பான் தன் மனைவி இலீதாவுடன் [21] கிரேக்க நாட்டைச் ச்பார்ட்டா எனும் நகரிலிருந்து ஆண்டு கொண்டு வந்தான். அவர்களுக்கு இரண்டு ஆண் மக்களும்,

9. Paris. 10. Peleus. 11. Thetis. 12. Zeus (Jupiter), 13. Hera (Juno). 14. Athene (Minerva). 15. Aphrodite (Venus). 16. Olympus. 17. Ares. 18. Cassandra. 19. Sparta. 20. Tyndareus. 21. Leda.

கிளிதெம் நெதிரா[22] என்றும் எலன்[23] என்றும் இரண்டு பெண் மக்களும் பிறந்தனர். ஆனல் சுயூசு எனும் தலைமைக் கடவுளுக்கும் இலீதா விற்கும் பிறந்தவள்தான் எலன் என்று கிரேக்க இலக்கியங்கள் சொல்லிச் செல்லும். கிளிதெம்நெதிரா என்பவள் அகமெம்னன்[24] எனும் இளவரசனைத் திருமணம் செய்துகொண்டாள். உலகிலேயே எலன் மிக்க பேரழகுடையளாய்த் திகழ்ந்தாள். மயிலோ, மாதோ என்று யாவர் நெஞ்சமும் மயங்கின. கண்டார் உயிருண்ணும் தோற்றமுடையவள் ; பொற் கொடியோ, அற்புதமோ என்று வையகம் வியந்தது. தாங்கள் ஆண்களாய்ப் பிறந்திலமே என்று பெண்கள் எண்ணி நைந்து நொந்தனராம். அழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்ற வல்லார்? அவள் ஓர் அழகுமலர் எனின் இழுக்காகாது. காதலால் கசிந்து கண்ணீர் மல்கிச் சித்தத்தை எலன் பால் வைத்த பல காளையர் அவளை மணக்கப் போட்டியிட்டனர். அவளை மணந்து மகிழ்வது என்று கொலோ என்று ஏங்கிய மாவீரர் பலராவர். தன்னையன்றி வேருெருவனை அவள் மணந்து கொண்டால் அவளையும், அவள் மாலையிடும் வீரனையும், பரம்பரையையும் வெட்டி வீழ்த்துவேன் என்று ஒவ்வொரு பெரு வீரனும் சூளுரைத்தான்.

எலனே தன்னுடைய மணாளனைத் தேர்ந்தெடுத்துக் கொள்வாள் என்றும், அவ்வாறு செய்துகொண்ட பிறகு களவாடப் படாதவாறும் சிறு துன்பமும் ஏற்படாதவாறும் நாங்கள் காப்போம் என்றும் எல்லா வீரரும் உறுதிமொழி தருமாறு செய்து விட்டான் எலனுடைய சிறிய தந்தை. அப்படி அவள் களவாடப் பெற்ருல் நாங்கள் எல்லாரும் அவளை மீட்கத் துணைபுரிவோம் என்று யாவரும் உறுதி கூறினர். எலன் மெனிலசைத்[25] தேர்ந்து தன் மணவாளனுக்கிக் கொண்டாள். மெனிலசு அகமெம்னனுடைய உடன்பிறந்தோனுவான். மாமனர் இறந்த பிறகு ச்பார்ட்டாவை ஆண்டு வந்தான்.

கப்பலில் வந்த பாரிசை மெனிலசு வரவேற்று, விருந்தினனுக அரண்மனைக்கு அழைத்துச் சென்ருன். எழிலரசியாகிய எலனைக் கண்டு வியந்து போனுன். அப்ரொடைட் எனும் காதல்தேவதை சொன்ன சிற்பி செதுக்காத சிலை இவளே என்று உறுதி கொண்டு, மெனிலசு வெளிநாடு சென்ற பொழுது எலனைத் தன் வயப்படுத்திக் களவாடித் திராய் நகருக்குக் கொண்டுவந்துவிட்டான். மெனிலசு திரும்பி வந்து பார்த்துத் திடுக்கிட்டுச் சகோதரனுகிய அகமெம்மனிடம் சென்று ஒரு வழி சொல்லுமாறு வேண்டினன். எப்படியும் எலனை மீட்டு வருதல் வேண்டும் என்று உறுதி கொண்டான். களவாடப் பெற்ருல் மீட்பதற்கு யாவரும் உதவி செய்வோம் என்று சொன்ன உறுதியினை இளவரசர்க்கு நினைவுப் படுத்தி, முதிய வீரனுகிய நெச்டர்[26] என்பவன் ஒரு பெரிய வீரர் படையையே திரட்டி

22. Clytemnestra. 23. Helen. 24 Agamemnon.
25. Menelaus 26. Nestor.

விட்டான். யாவரிலும் வீராதி வீரன் அகிலெசு [27] என்பவனுவான். எலனை மீட்பதற்குப் பெரிதும் துணை புரிந்தவன் இவனேயாவான். அகிலெசினுடைய தாய் தந்தையர் பீலசு, தீதிசு என்பவராவர். இவர்தம் திருமணத்தை முன்னர்க் கூறினேன். அகிலெசு இளம் பருவத்திலேயே இறந்துவிடுவான் என்னும் ஒரு மறை மொழியை நினைத்து அவனுடைய தாய் மிகவும் கலங்கினுள். அகிலெசு குழந்தையாயிருக்கும்போழ்து அவனுடைய தாய் குழந்தையின் வலக் கணுக்காலைப் பிடித்துக்கொண்டு பாதாள உலகத்திலிருக்கும் தைக்சு [28] என்னும் நதியில் மூழ்க வைத்தாள். பிடித்துக் கொண்டிருந்த வலக் கணுக்காலில் மட்டும் தண்ணீர் படவில்லை. தண்ணீர் பட்ட இடங்களை யாராலும் எந்தக் கருவியாலும் தாக்கி அகிலெசை வீழ்த்த முடியாது. அகிலெசின் உயிரைப் பறிக்கும் இடம் அவ் வலக் கணுக்கால்தான் யாரும் வெற்றி கொள்ளாதவாறு தாய் தீதிசு, அவனைப் பெரு வீரனுக்கி விட்டாள். வலக் காலைக் குறிக்கொண்டே பாரிசு அம்பு எய்யாவிட்டாலும் ஊழ்வினையால் அவ்விடத்தில் அம்பு பட்டு உயிர் துறக்கும் நிலை பிறகு ஏற்பட்டது. இதாகாலி [29] லிருந்து ஒதிசிசு [30] என்னும் கிரேக்க அரசனும் துணைக்கு வந்தான்.

தறுகண் வீரன் அகமெம்னன், வீராதி வீரன் அகிலெசு, சாதாரண மனிதனை விட நான்கு மடங்கு பேருருவம் படைத்த அசெக்சு, [31] பேராண்மையும் அறிவுமுடைய ஒதிசிசு, உயிர்க் கஞ்சாத மெனிலெசு, மறவன் தையோமிதெசு [32] போன்ற இன்னும் பல வீரர் செறிந்த கிரேக்கப்படை கிளர்ந்து எழுந்து கப்பல்களில், திராய் நோக்கிப் புறப்பட்டது. எலனை எப்படியாகிலும் மீட்டு வருவதே நம் கருத்து என்று வீரர் ஆரவாரம் செய்தனர். அகமெம்னன்தான் கிரேக்கப் படையின் தானைத்தலைவன்.

பிரியமின் முதல் மகனை வீராதி வீரன் எக்தர், மைத்துனனுகிய பெருவீரன் ஈனிசு [33] மலைபோன்ற பெருவீரன் கைக்னசு, [34] பாரிசு, மாவீரன் சார்ப்பீதன், [35] முதலிய திராய் வீரர் நிறைந்த பெரும்படை வட்டுடை அணிந்து வீறுகொண்டு எழுந்தது. இப் படைக்குத் தானைத்தலைவன் எக்தர் தான். படைதான் பெருத்ததோ அலது பார்தான் சிறுத்ததோ எனும்படி நிலமதிர எழுந்தது. கடலும் கடலும் எதிர்த்தால் எவ்வாறு இருக்குமோ அவ்வாறு இரு திறப் படைகளும் போர் வெறி கொண்டு எதிர்த்தன. அகிலெசு என்பான் யாவரும் நடுநடுங்கும்படி மலைபோன்ற கைக்னசு என்பவனைக் கொன்று வீரம் விளைத்தான். ஒன்பதாண்டுகள் முற்றுகை செய்து விடாமல் போர் செய்தனர். தறுகண் வீரனுகிய அகிலெசைக் கண்டு திராய் வீரர் அஞ்சி நடுங்கினர். இனிமேல் நடந்த அச்ச மூட்டும் போர் நிகழ்ச்சிகளைத் தாம் "இலியத்" சொல்லிச் செல்கிறது. இம் மாபெரும் காப்பியம் ஈண்டே தொடங்குகிறது. (தொடரும்)

27. Achilles. 28. River Styx. 29. Ithaca. 30. Odysseus. 31. Ajax. 32. Diomedes. 33. Aeneas. 34. Giant Cycnus. 35. Sarpedon.

தஞ்சையில் தமிழகப் புலவர் குழு.

இரண்டாவது கூட்டம்.

(புலவர்கள் ந. இராமநாதன், தி. பாலசுப்பிரமணியன்,)
விழாக் குழு அமைப்பாளர்கள்.

தோற்றுவாய் :

தஞ்சையைச் சார்ந்த கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் 19-4-59 ஞாயிறன்று புலவர்குழுவினரின் 2-ஆம் கூட்டம் நிகழ்ந்தது. முப்பத்து மூவருக்கு மேற்பட்ட முதுபெரும் புலவர்கள் வந்திருந்தனர். தாய் மொழியான தமிழுக்குத் தொண்டு செய்யும் தூய எண்ணத்தோடு புலவர் பெருமக்கள் தமிழகத்தின் பல பகுதியிலிருந்து வந்து கூடு கின்றனரென்ருல் எவ்வளவு சிறப்பிற்குரியதாகும் ? ஆகவே அன்று காலையில் காய்கதிர்ச் செல்வனின் கோடை வெப்பத்தைத் தணிக்க எண்ணிய கொண்டல் பெருமழை பொழிந்தது. தரையிடங்க ளெல்லாம் தண்ணெனக் குளிர்ந்தன. வரவேற்பு விழாக் குழுவினர் புலவர் குழுக் கூட்டத்திற்கும் வரவேற்புக்கும் ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

கூட்டத் தொடக்கம் :

சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில் காலை எட்டு மணிக்கெல்லாம் தஞ்சை நாதசுர இசைவாணர் திரு. இராசு அவர்கள் எழுப்பிய இன்னிசை தமிழ்ப் பெருமக்களை வருக வருக என அழைத்தது. பெருமழையின் விளைவாய் புலவர் குழுக் கூட்டம் தொடங்கச் சிறிது காலந்தாழ்த்த வேண்டியதாயிற்று. புலவர் அப்பாராசன், புலவர்-மாணவர் சொக்கலிங்கம் ஆகியோரின் தமிழ்ப் பண்கள் எல்லோரையும் இன்புறுத்தின. ஏறத்தாழ ஒன்பதரை மணியளவில் இறை வணக்கத்திற்குப் பிறகுப் புலவர் குழுக் கூட்டம் தொடங்கப் பெறுவதாயிற்று.

தலைவர் தேர்தல் :

முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், முறைப்படி இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கவேண்டியவர் பேரறிஞர் திரு. ச. சோமசுந்தர பாரதியார் அவர்களே ஆவரென்றும், அவர்கள் வர இயலாமற்போனதால் இக்குழுவில் ஆண்டால் முதிர்ந்து விளங்கும் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைவராக இருப்பாரென்றும் முன்மொழிந்தார். புலவர் குழுவினர் கைகொட்டித் தம்முள்ள விருப்பினை ஒருசேர அறிவித்து மகிழ்ந்தனர்.

தலைவருரை :

கரந்தையிற் கூடிய புலவர் குழுவிற்குத் தம்மைத் தலைவராக இருக்கப் பணித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கவிஞர் கூறியவை வருமாறு :—

தம்முடைய வாழ்வில் முதுமைபற்றிய எண்ணம் தோன்றியதே இல்லை என்றும், இன்று திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்

முதுமை கருதித் தமக்குத் தலைமை தாங்கும் பொறுப்பை அளித்தது தான் முதுமை பற்றிய எண்ணம் தமக்குண்டாகக் காரணமாயிற்று என்றும் நகைச்சுவைபட மொழிந்தனர். இவ்வுரை கவிஞரின் உள்ள உரனையும் நா நலத்தையும் நன்கு விளக்கிற்று.

தமிழரின் இழந்த கலை நலங்களை மீட்க வேண்டுமென்னும் நோக்கொடு விளங்கும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற் கூடிய தமிழகப் புலவர் குழுவிற்குத், தமிழகம் இழந்த பண்டைப் பெருமை, புதியனவாகக் கைக்கொள்ள வேண்டிய பெருமை ஆயவற்றிற்காகச் சலியாது எதிர்ப்புக்கு அஞ்சாது உரையாலும் கவிதையாலும் உண்மையாகத் தொண்டு செய்துவரும் கவிஞர் திரு. பாரதிதாசனர் அவர்கள் தலைமை ஏற்றது மிகவும் பொருத்தமாக இருந்தது.

குழுவிற்கு வரவேற்பு :

கடைச் சங்கப் பழமைத் தொடர்பொடு விளங்கும் புலவர் குழுவிற்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கச் சார்பில் திரு. ச. சுயம்பிரகாசம் அவர்களும், தஞ்சை மாவட்டத் தமிழாசிரியர் கழகச் சார்பில் திரு. இரா. ஏகாம்பரநாதன் அவர்களும், நகர மக்கள் சார்பில் திரு. அ. கு. வேலன் அவர்களும், திரு. ப. சா. வேங்கடகிருட்டினப் பிள்ளை அவர்களும் வரவேற்புரை கூறினர். பின்னர் திரு. கி. கோதண்டபாணி அவர்கள் குழு உறுப்பினர் ஒவ்வொருவரையும் அறிமுகம் செய்து வைத்தார். கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. ச. சுயம்பிரகாசம் அவர்கள் குழுவினருக்கு வரவேற்பிதழ் படித்தளித்தார்.

குழுவினர் உரை :

வரவேற்புக்கு விடை கூறுமுகத்தான் புலவர் சிலர் உரையாற்றினர். உரைகளின் கருத்துக்கள் பின் வருவன :-

1. பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள்

இந் நாள் நன்னாள். தமிழகத்திற்குப் பொன்னான நாளாகும் தமிழகத்தின் புலவர் அனைவர் கருத்தையும் திரட்டி அறிவிக்க வேண்டுமென்பது புலவர் குழு கூட்டியதின் கருத்தாகும். புலவர் இருவர் கூடி ஒன்றை ஆய்வது முடியாது என்ற இடைக்கால நிலையைப் பொய்யாக்கவே திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் இக் குழுவைக் கூட்டியுள்ளார். இது போலப் புலவர், புரவலர் ஆய பெருமக்கள் கூடிக் கலந்து உரையாடி மகிழும் இன்பத்திற்கு இணையாக உம்பர் உலகத்து இன்பமும் அமையாதென்னும் கருத்துப்பட அமைந்த நாலடியார் பாடலை இன்று எண்ணுதல் தகும்.

“ தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்
தும்ப ருறைவார் பதி”.

அன்று கடைச் சங்கம் அமைத்துப் புலவர்களைக் கூட்டித் தமிழ் ஆய்ந்த பெருமை பாண்டியர்க்குண்டு. இன்று தமிழ் மன்னர் இல்லாவிட்டாலும் மக்கள் சார்பில் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் முன்னின்று புலவர் குழு அமைத்துள்ளார். முதுமை பற்றிப் புலவர் குழுவில் இன்று திரு பாரதிதாசனுர்க்குத் தலைமை வழங்கப்பெற்றது அவருக்கு அடுத்த நிலையில் யானிருப்பேன் என எண்ணுகின்றேன். முதுமை பற்றித் தலைமை ஏற்கும் உரிமையை நினைத்தால் இன்பமாக இருக்கிறது. ஆனுல் முதுமையால் விளையும் தளர்வை நினைத்தால் துன்பமாக இருக்கின்றது. மேலும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு வரும்போது தமிழ் நாடெங்கும் தமிழ் பரவும் வகைசெய்த தமிழவேள் திரு. த. வே. உமாமகேசுவரனுர் அவர்கள் தொண்டு நினைவிற்கு வருகின்றது.

2. டாக்டர். அ. சிதம்பரநாதன் அவர்கள்

தமிழகப் புலவர் குழு நல்ல உரம் பெற்றுவிட்டது. இக்குழு தமிழ்நாடுபற்றியும் தமிழ்மொழி பற்றியும் தக்க அறிவுரைகளை வழங்குவதின் வாயிலாக நல்ல தொண்டு செய்யுமென நம்பலாம். இக் குழுவை யாரும் அழிக்க நினைத்தாலும் அழிவுபடாது. அவ்வள விற்கு மக்கள் உள்ளத்தில் இடம் பெற்றுவிட்டது. இக்குழு, இரண்டாம் முறையாகக், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் கூடியது சிறப்பிற்குரிய தாகும். இக் கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளிவிழா நாளில் இச் சங்கத் தலைவர் உமாமகேசுவரனுர் என்னிடம் கூறிய உரை நினைவிற்கு வருகின்றது. சங்கத்தின் வெள்ளிவிழாக் கொண்டாடி மகிழும் யான் பொன்விழாவைக் காணமாட்டேன் என்று கூறினர். இன்று சங்கம் புலவர் குழுவிற்கு அளித்த வரவேற்பு பொன்விழா நாளோ என்று எண்ண வைக்கின்றது. சங்கம் பல ஆண்டுகளாகத் தூய தமிழ்த் தொண்டு செய்து வருகின்றது. கரந்தைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து அண்ணமலைப் பல்கலைக் கழகத்திற்கு வந்த அறிஞரால் 'வித்துவான்' என்ற பட்டம் 'புலவர்' என்று ஆயிற்று. இவ்வாறு நல்ல தமிழ்ச் சொல்லாட்சிக்குப் பல துறையிலும் பாடுபட்டு வரும் பெருமை சங்கத்திற்கு உண்டு. சங்க காலத்தில் அறிவுடை யோனுறு அரசன் சென்ருன். இன்றும் நன்மக்கள் வழிச்சென்ருல் தான் ஆட்சி சிறக்க முடியும். மொழி பற்றிய கருத்துக்களை அரசிய லாருக்கும் மக்களுக்கும் அறிவிக்க வேண்டுவது புலவர் குழுவின் நோக்கமாகும். "ஆகாசவாணி" போன்ற சொல்லாட்சிகள் ஒழிந்துபோகும். தமிழ் நாட்டில் விளங்கும் எல்லாக் கட்சிகளுக்கும் தமிழ் உரியது. மொழி அடிப்படையில் தமிழர் ஒன்றுபடவேண்டும். இந்தியப் பாராளுமன்றத்தில் உள்ள தமிழர் அனைவரும் ஒன்றுபட்டு தமிழ்த் தொடர்புடைய செய்திகளுக்கு மன்ருடுதல் வேண்டும்.

3. டாக்டர் மா. இராசமாணிக்கம் அவர்கள்

சங்கத்தில் மாணவனுக இருந்த யான் புலவர் குழு உறுப்பின னுக இருப்பது குறித்து மகிழ்கின்றேன். தமிழவேள் த. வே. உமா

மகேசுவரனுர் இருந்து இத்தகைய நிகழ்ச்சிகளையெல்லாம் காணுமை குறித்து வருந்துகின்றேன். தமிழரும் தமிழ்ப் புலவரும் ஒற்றுமை யுற்று வாழ்வர் என்னும் உண்மையை உலகுக்குப் புலவர் குழு கூட்டி அறிவித்தவர் திரு. கி. ஆ. பெ. அவர்களாவார்.

திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களை அண்டி உரையாடிக் கொண்டிருந்தபோது அவர் "தமிழன் உருப்படமாட்டான்; கடல் நீர் பொங்கிவந்து இன்றுள்ளவரிற் பெரும்பாலோர் அழிந்து சிலர் எஞ்சுவார்களே யாளுல் அவர்கள் ஒன்றுபட்டுச் சிறக்க வழியுண்டு", என்றார். வெந்த உள்ளத்திலிருந்து வெளிவந்த வருத்தம்தரும் கருத்து இதுவாகும். இன்று தமிழகநிலை மாறியுள்ளது. தமிழகம் ஒன்றுபடக் காணுகின்றோம். தமிழ்ப் புலவர்கள் ஒன்றுபட்டுக் கூடி யிருப்பது பெருமைக்குரியதாகும்.

4. டாக்டர் மொ. அ. துரையரங்கனுர் அவர்கள்

இன்று சங்கம் எங்களைப் பாராட்டவில்லையேல் சங்கத்திற்கும் மதிப்பில்லை, எங்களுக்கும் மதிப்பில்லை. சங்கமும் புலவர்களும் இணை பிரியாது சார்ந்து நிற்கும்நிலை பெருமைக்குரியதாகும். பழைய சங்க காலத்தில் மன்னர்கட்கும் புலவர்கட்கும் மிக்க தொடர்பிருந்தது. அக்காலத்துக் குளத்திலுள்ள தாமரை இலையாய்ப் பயனின்றி உரையும் பாட்டும் பெருமல் மாய்ந்தோர் பலர். குளத்திலுள்ள மலர் சிறந்து விளங்குகின்றாற்போலப் புலவர் பாடும் புகழுடையாராகி இம்மையிற் சிறந்து, மறுமையில் வலவன் ஏவா வானவூர்தியிற் செல்லுதற்கு ஏற்ப வாழ்ந்தவர் பலருண்டு. "என்னேடு எதிர்ந்த மன்னரைப் புறங் காணுவிட்டால், 'புலவர் பாடாது வரைக என் நிலவரை" என்று வஞ்சினங் கூறிய மன்னர்களும் இருந்தனர்.

இவ்வளவு சிறப்பும் போய்ப், பூசலாலும், பொருமையாலும் தமிழர் தாழ்ந்தனர். எல்லா வகையான புலவர்களும் இக் குழுவில் உள்ளனர். தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து தமிழ் ஆக்கங் கருதிப் பாடுபட இக்குழு ஆவன செய்யவேண்டும்.

5. டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள்

புலவர் குழுக் கூட்டத்திற் கலந்துகொள்ள இங்கு வந்துள்ள எங்கள்பால் சங்கமும் இங்குப் பெருந்திரளாகக் கூடியுள்ள மக்களும் நல் வரவேற்பு அளிக்கு முகத்தால் நன்றி தெரிவித்துள்ளீர்கள். வரவேற்புக்குச் சிறப்பளித்த உங்களுக்கு நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். மேலும் நாங்கள் கூறும் கருத்திற்குச் சிறிது செவிகொடுக்கக் கேட்டுக்கொள்ளுகின்றோம். அறிவுத் துறை யில் புலவர் வேற்றுமையுடையவர்; உள்ளத்தால் ஒற்றுமை யுடையவர். இந்த வேற்றுமையும் ஒற்றுமையும் நாட்டிற்கு நல்லன. புலவர்களை ஒன்று கூட்டிய பெருமை திரு. கி. ஆ. பெ. அவர்களைச்

சாரும். தமிழானது வழக்கு மொழி; ஏட்டளவில் உள்ள மொழி யன்று. ஆயிரக்கணக்கான மக்கள் வாயில் வளரும் மொழியாக உள்ளது நம் தமிழ் மொழி. பேச்சு வழக்கிலும் பிழைபடப் பேசுத லாகாது. திரைப்படக் காட்சித் துறையில் தமிழ் மிகவும் கெட்டு விட்டது. ஒற்றெழுத்துக்களை இட்டு எழுதுகின்ற பழக்கம் அவர்கள் பாலில்லை. கல்யாண பரிசு, அதிசய திருடன், நல்ல இடத்து சம்பந்தம்—என ஒற்றுக்களை விட்டெழுதும் தன்மை பெரிதாகி வருகின்றது. இவ்வாறு இத்துறையில் நேரும் பிழைகளை நினைத் தால் அஞ்சவேண்டி யுள்ளது. ஒற்றுக்களையாவது தக்க இடத்தி லிட்டு எழுதுதல் வேண்டும். அப்போதுதான் அருமைத் தமிழ் இருப்பதாக எண்ண முடியும்.

6. பேராசிரியர் சி. இலக்குவனார் அவர்கள்

நம் நாட்டுக்குச் செல்வம் நம் மொழியிலுள்ள நல்ல இலக்கியங் கள். இலக்கியச் செல்வங்களே நம் பெருமையை உலகுக்கு அறிவித்துக் கொண்டிருக்கின்றன. புலவர், புலவராக இப்போது இல்லை. தம் வாழ்வையே பெருங்குறிக்கோளாகக் கொண்டிருப்பதால் பொதுமக்களுடன் தொடர்பில்லை. தொடர்பு படுத்தியவர் திரு. கி. ஆ. பெ. ஆவர். வெளிநாட்டவர் எத்துறையி லீடுபட்டுள்ளவ ராலும் அவரவர் தாய்மொழியிற் புலமையும், பயிற்சியும் பெற்றவர் களாய் விளங்குகின்றனர். இந் நாட்டில் அதுபோன்ற நிலையில்லை. அத்தகைய நன்னாள் வருதல் வேண்டும். பொதுமக்கள் புலவர் களாக வேண்டும். அதற்குப் புலவர் குழுவின் முயற்சியும் செயலும் பயன்படுமாக.

7. திரு. கீ. இராமலிங்கனார் அவர்கள்

புலவர் குழுவிற்கு இருவகையான பணிகள் இன்று முன்னுள்ளன. ஒன்று தமிழைக் காப்பது. பிறிதொன்று தமிழை வளர்ப்பது. தமிழைக் காப்பதற்கும், வளர்ப்பதற்கும் கருவியாகப் பயன்படும் பேராற்றல் பெற்று விளங்குவது புலவர் குழுவாகும். இக்குழுவினை உருவாக்கி ஆயிரக்கணக்கான மக்களுக்கு அறிமுகப்படுத்தியவர் திரு கி. ஆ. பெ. ஆவர். இக்குழுவிற்கு உங்களாலான உதவியை அளிப்பதன் வாயிலாக உங்கள் கடமையைச் செய்ய வேண்டுகின்றேன். தமிழென்று பிறமொழியைப் பயன்படுத்தக் கூடாது. தமிழில் நல்ல ஆர்வமிருந்தால் நல்ல சொற்களை ஆக்கி வழங்கமுடியும்.

8. திரு. மேரி மாசிலாமணி அம்மையார் அவர்கள்

மேற்கு நாடுகளில் பெண்கள் தங்கள் உரிமைகளைப் பெறப் போரிட்டனர் என்று அறிகின்றோம். பண்டைய தமிழக மரபுப்படி இயல்பாகவே தமிழகப் புலவர் குழுவில் பெண்களுக்கு இடங் கொடுத்துள்ளனர். நம் மொழியில் நாம் பேசுதல், நூலியற்றுதல், ஆட்சி அமைத்தல் எல்லாம் நம்முடைய பிறப்புரிமையாகும். இவற்

றிற்காக மற்றவரைப் பகைத்துக்கொள்ள வேண்டிய இன்றியமை யாமை இல்லை. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது தமிழருடைய கொள்கையாகும்.

9. திரு. புலவர் வெள்ளைவாரணர் அவர்கள்

புலவர், பொதுமக்கள் என்னும் வேறுபாடு கூடாது. தமிழகத் திற் பிறந்த அனைவரும் புலமை பெற்றவராக விளங்கவேண்டும். "எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே" என ஔவையார் கூறியபடி மக்களின் உள்ளத்திற் கேற்ப நாடு சிறப்படையும். மக்களின் உள்ளக் கருத்து வளம்பெறத் தாய் மொழியே பெரிதும் துணைசெய்வதாகும். இச்செயலுக்குப் புலவர் குழுவும் மற்றவர்களும் துணை செய்யவேண்டும்.

10. பேராசிரியர் திரு. காமாட்சி குமாரசாமி அம்மையார்

புலவர் குழுவில் சங்ககால மரபுப்படிப் பெண்களுக்கு இடமுண்டு. தாம் பெற்ற பட்டத்தால் பெருமை அடைவாருமுண்டு; சிலரைச் சார்ந்ததால் பட்டம் பெருமை அடைவதுமுண்டு. புலவர் குழுவில் இடம் பெற்றமையால் அதற்கேற்ற பெருமையை அடைவேன்.

அமைப்பாளர் உரை:

புலவர் குழு அமைப்பாளர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் குழுவின் அமைப்பின் நோக்கம் பற்றியும், அஃது எதிர் காலத்தில் தமிழ் மக்களுக்கும், தமிழுக்கும் செய்யவிருக்கும் தொண்டினைக் குறித்தும் விளக்கினர். இக்குழு தொடர்ந்து தமிழ் நாட்டின் மாவட்டங்கள்தோறும் சென்று கூடும். ஆயினும் அடுத்த, மூன்ருங் கூட்டம், தமிழ்ச் சங்கம் அமைந்துள்ள மதுரையில் நிகழ விருக்கின்றது.

குழுவினர் ஆய்வு:

பிறகு புலவர் குழுவினர் தனித்திருந்து குழுவிற்குக் கொண்டு வந்திருந்த முடிவுகளை ஆய்ந்தனர். நண்பகலில் குழுவினரும் பிறரும் உணவு உண்டபின் மீண்டும் ஆய்வு நிகழ்ந்தது.

ஊர்வலம்:

சிற்றுண்டிக்குப் பின் யானையும் குதிரையும் தொடரக், கொம்பு, தாரை, மேளம், பல்லியம் ஆகியவை முழங்க, வண்ண மணிகளினல் அழகு செய்யப்பட்ட ஓவியத் தேரில் புலவர் குழுவின் ஊர்வலம் புறப்பட்டது. வெடிகள் வெடிக்கப்பட்டன. திரளான மக்கள் முன்னும் பின்னும், தமிழ் வாழ்க! தமிழகப் புலவர் குழு வாழ்க!

என்ற ஒலிகளை முழக்கிக்கொண்டு, அணியாகச் சென்றனர். புலவர் குழுவின் இரண்டாங் கூட்டத் தலைவர் என்ற முறையில் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் யானைமீதமர்ந்து குழுவினர் ஏறிவந்த இரு தேர்களுக்கும் முன் போய்க்கொண்டிருந்தார். பயன்கருதாத் தமிழ்ப் பெருந் தொண்டு செய்துவரும் கவிஞரையும் புலவர் குழுவினரையும் காணத் தமிழ் மக்கள் நகரப் பெருந்தெருக்களின் இருமருங்கிலும் கூடியிருந்தனர். "படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள், நெடு நல் யானை எம்பரிசில்" எனக் கூறுமாறு, அரசன் உளமுவந் தளித்த யானையாகிய பரிசிலைப் பெற்றுவரும் பெருமிதமிக்க புலவர் போலக் கவிஞர் எடுப்பான தோற்றமொடு யானையின்மீதமர்ந்து வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். நகரப் பெருந்தெருக்கள் பைந்தழைத் தொங்கல்களாலும், செந்தமிழ்த் தொடர்களைக் கொண்ட வளைவுகளாலும் அழகுபெற்று விளங்கின.

ஆங்காங்கு ஊர்வலத்தை நிறுத்திச் சுவைநீரும் கற்கண்டும் சந்தனமும் வழங்கி மக்கள் பெருமகிழ்வு கொண்டனர். கரந்தையி லிருந்து புறப்பட்ட ஊர்வலம் வெள்ளைப்பிள்ளையார் கோயிற்பக்கம் வந்தவுடன், கோயிலில் புலவர்கள் நீடூழி வாழவேண்டி வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. தஞ்சைக் கீழவாயில் வணிகப் பெருமக்கள் ஊர்வலம் வரும்வழியைப் பெருவிழாக் காலங்களைப் போன்று பேரழகு படுத்தியிருந்தனர். வழிநெடுகச் சிறந்த நிழற்படமெடுப்பார் படமெடுத்தனர். இவ்வாருக ஊர்வலம் கோட்டைப் பெருந் தெருக்களைக் கடந்து கீழவாயில் சென்று தெற்கலங்கம் வழியாகத் திலகர்திடலை அடைந்தது.

வரவேற்புப் பொதுக்கூட்டம் :

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தலைவர் திரு. ச. சுயம்பிரகாசம் அவர்கள் வந்து கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களை வரவேற்புக் குழுவின் சார்பில் வரவேற்று உரை நிகழ்த்தினர். சங்க அமைச்சர் திரு. சி. வேதாசலம் அவர்கள் வரவேற்புப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர், நகர மக்கள் சார்பில் புலவர் குழுவினர்க்குத் திரு. இரா. ஏகாம்பரநாதன் அவர்கள் வாழ்த்துரையைப் படித்து வழங்கினர். புலவர் குழுவினரைத் தனித்தனியே பொதுமக்கட்குத் திரு. கி. கோதண்டபாணி அவர்கள் அறிமுகம் செய்துவைத்தார். வணிகப் பெருமக்கள் வெண்மலர்மாலை சூட்டினர். ஒவ்வொரு புலவருக்கும் கண்ணாடிச் சட்டமிடப்பட்ட வாழ்த்துரை வழங்கப் பெற்றது. அடுத்துத் தஞ்சை மாவட்டத் தமிழாசிரியர் கழகச் சார்பில் வாழ்த்தியலின்னுரை ஒன்றினைத் திரு. தி. பாலசுப்பிரமணியன் அவர்கள் படித்துப் புலவர் குழுவினர்க்கு வழங்கினர். திரு. கு. சின்னையன் அவர்கள் புலவர் அனைவர்க்கும் தமிழாசிரியர் கழகச் சார்பில் பொன்னிழை மாலை அணிவித்தார். புலவர் பலர் கருத்துரை வழங்கினர்.

குழுவினர் கருத்துரை :

1 திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்

தஞ்சை மக்களின் தமிழ்ப் பற்று எங்களைக் கவர்ந்தது. பாராட்டை எண்ணும்போது, "எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்னும் ஔவையார் கூற்று நினைவுக்கு வருகின்றது. இன்று புலவர்கள் தங்கள் கருத்தைத் திரட்டித் தர முன்வந்துள்ளனர். அவைகளை ஏற்று நடக்கவும் தமிழ் மக்கள் முன்வந்துள்ளனர். தமிழ் நூலிற்கும், தமிழர் பண்பாட்டிற்கும் மாறாக வெளிவந்துலவும் இதழ்கள் உண்டு. தமிழ்ப் புலவர்கள் ஏற்றுக்கொண்ட கொள்கையைத்தான் ஒத்துக்கொள்ள வேண்டுமென்னும் உறுதி வேண்டும்.

2 டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள்

நல்ல தமிழ்ப் பண்பாட்டிற் கேற்றவகையில் தமிழ் மக்கள் வாழ வேண்டும் என்னும் கொள்கையை வலியுறுத்தவே புலவர் குழு அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழி பல்லாயிரம் ஆண்டுகளாக வழங்கி வருவது. இன்று தமிழன் வாழ்கின்றான் என்பது பொருந்தாது. அவனது திருமணத்தில் தமிழில்லை; வாழ்வின் தொடக்கமே திருமணம்; அங்குத் தமிழில்லை. தமிழனுக்கு இட்டு வழங்கும் பெயர்கள் தமிழ்ப் பெயர்களாக இல்லை. இதுவும் மானக்கேடேயாகும். தமிழை வாழ்வுத்துறைதோறும் கையாளுவதால்தான் வளர்க்க முடியும். முதலில் வீட்டில் வளரவேண்டும். அப்போதுதான் வெளியிலும் வளரும். தமிழ் நன்முறையில் வளர்ந்தால்தான் தமிழ்நாடு உயரும்.

3 கவிஞர் பாரதிதாசனார் அவர்கள்

தமிழ் ஒரு சிலரால் தாழ்த்தப்படுகிறது; வஞ்சிக்கப்படுகிறது. இதனைத் தவிர்க்க நல்ல இயக்கங்களும், தலைவர்களும பாடுபடுதலை அனைவரும் நன்கறிவர். கோயில்களில் தமிழ்மொழிக்கு இடமில்லை. ஒருவன் வாழ்வினை மேற்படுத்தும் எல்லாவற்றிற்கும் மேலாக மதிக்கப்பெற வேண்டிய தமிழ் ஒதுக்கப்படுகிறது; மிதிக்கப்படுகிறது. இதனைத் தடுக்கவேண்டாமா? வெள்ளம்போல் கூடியுள்ள நீங்கள் உடலால் வேறுபட்டிருந்தாலும் தமிழுள்ளத்தால் தமிழராய் ஒன்றுபட்டுள்ளீர்கள். தமிழானது உலக முதன்மொழி. நேற்று வந்த மொழியிலிருந்து தமிழ் வந்ததென்று சிலர் கூசாது கூறுகின்றனர். தமிழுக்கும் தமிழருக்கும் விடுதலைக்காலம் தொலைவிலில்லை. உங்கள் உணர்ச்சி இன்றுபோல் என்றும் இருப்பதாக.

பண்டித, திரு. அ. கந்தசாமிப் பிள்ளை அவர்களும், பேராசிரியர் மேரி. மாசிலாமணி அம்மையார் அவர்களும் மிக்க உணர்ச்சியோடு உரையாற்றினர்.

அமைப்பாளர் நன்றி கூறல் :

தமிழ்நாட்டு வானொலியில் பல ஆண்டுகளாக "வானொலி" "வணக்கம்" எனக் கூறிவந்த சொற்களையெல்லாம் வேண்டுமென்றே "ஆகாஷ்வாணி" "ஜெய்ஹிந்த்" எனக் கூறித் தமிழ் மக்களின் உள்ளத்தைப் புண்படுத்துகின்றனர். வேண்டுகோள் விடுத்தும் பயனில்லை. தமிழர்கள் ஒன்றுபடுதற்குத் தமிழ் தவிர வேறு ஒன்றுமில்லை. மொழி மக்களின் விழி எனப்படும். விழியிழந்த வாழ்வு வாழ்வாகாது. தமிழ்ப் புலவர்கள் தமிழர் ஒன்றுபடுதற்குத் தக்க துணையாயிருப்பர். அவர்கள் முடிவினைத் தமிழர்கள் ஏற்றுச் செயற்படுத்த வேண்டும்.

முடிவுகள் :

கூட்டத்தில் நான்கு முடிவுகள் ஒருமனதாய் நிறைவேற்றப் பட்டன. தமிழை ஆட்சி மொழியாக்கியும், பயிற்று மொழியாக்குதற்கு முன்னோடித் திட்டம் வகுத்தும் செயலாற்றிவரும் சென்னை மாநில அரசியலாரைப் பாராட்டியும், ஆகாசவாணியை அகற்றி வானொலி என்று கூறும்படி ஆவன செய்யவும், புலவர் குழுவின் முடிவுகளை மாநில அரசும், இந்திய அரசும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், சென்னை இராச்சியம் என்னும் பெயரைத் தமிழ் நாடு என்று மாற்றிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளும் முடிவுகளைத் திரு. அ. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்தார். திரு. ச. சம்பத்து அவர்கள் வழிமொழிந்தார்.

நன்றி கூறல் :

தலைவர் முடிவுரைக்குப்பின் திரு. கு. சிவஞானம் அவர்கள் நன்றி கூறியவுடன் கூட்டம் இனிது முடிந்தது.

தஞ்சை நகரப் பெருமக்கள் சார்பில் வரவேற்றுப் பெருஞ் சிறப்புற விழா நிகழ்ந்ததற்குப் பொருளாளராகவிருந்தும், விழாவிற்கு வேண்டிய பொருள் திரட்டியும் உதவிய திருவாளர் மா. ந. கொண்டலவர்கட்கும், திரு. வேங்கடநாராயணனவர்கட்கும், திரு. குமாரசாமிச் செட்டியாரவர்கட்கும், கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவரவர்கட்கும், பொருளாளரவர்கட்கும், அமைச்சரவர்கட்கும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையேம்.

செந்தலையைச் சேர்ந்த கல்வெட்டுகள்.

வித்துவான், சி. கோவிந்தராசன்,
விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

செந்தலை என்பது தஞ்சை மாவட்டத்தில் உள்ள பழமை வாய்ந்த ஒரு சிற்றூர். இது திருக்காட்டுப்பள்ளிக்குக் கிழக்கே மூன்றாவது கல் அளவிலும், தஞ்சைக்கு வடக்கே திருவையாறு செல்லும் வழியிலுள்ள திருக்கண்டியூருக்கு நேர் மேற்காகத் திருக்காட்டுப்பள்ளிக்குச் செல்லும் சாலையில் ஒன்பதாவது கல் அளவிலும் அமைந்துள்ளது. இவ்வூரை ஆர்க்காட்டுக் கூற்றத்துப் பிரமதேயம் சந்திரலேகைச் சதுர்வேதிமங்கலம் என்று கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. இங்கு இப்பொழுது சிவன் கோயிலாகக் காட்சி தருவது சுந்தரேசுவரர் கோயில் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலிலுள்ள அரிய கல்வெட்டுக்களில் சிலவற்றை அரசாங்கத்தார் வெளியிட்டுள்ளனர். இச் செந்தலையும் அதனைச் சார்ந்த நியமம் முதலிய பகுதிகளும் முத்தரைய மன்னர்களது ஆட்சிக்குத் தலைமையிடமாக இருந்ததென்பது வரலாறு கண்டதேயாம். நியமத்தில் இருந்த பிடாரி கோயிலிலிருந்து கொண்டுவரப்பட்ட தூண்களைக்கொண்டு பிற்காலத்தில் செந்தலை சுந்தரேசுவரர் கோயிலில் ஒரு மகாமண்டபம் கட்டப்பட்டுள்ளது. இத்தூண்களில் முத்தரைய மன்னர்களின் வென்றிமேம்பாடுகளைக் கூறும் அரிய கல்வெட்டுக்கள் இருக்கின்றன. மற்றும் இச் செந்தலைக் கோயிலைப் பற்றிய வரலாற்றுச் சுருக்கமாக, திருக்காட்டுப்பள்ளி சிவசாமி அய்யர் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராயிருந்த திரு. S. R. பாலசுப்பிரமணிய அய்யரவர்கள் தக்க விளக்கப்படங்களுடன் ஒரு சிறு நூல் வெளியிட்டுள்ளார்.

செந்தலைக் கோயில் பலமுறை சீர்செய்யப்பெற்றிருக்கும் நிலையைக் கோயிலின் அமைப்பினைக் கூர்ந்து பார்ப்பவர் நன்குணர்வர். இக்கோயிலின் தலைக்கோபுரத்தினை அடுத்து உட்புறமாக வடகிழக்குத் திருச்சுற்று மதிற்சுவரை அடைவாகக்கொண்டு உயர்ந்த பாங்கில் கட்டப்பட்டுள்ள மண்டபத்தினைப் 'பாரத மண்டபம்' என்று கூறுவர். இக்கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டில், முதல் ஆதித்த சோழனின் ஒன்பதாவது ஆட்சியாண்டில் (கி. பி. 880-ல்) வயிரமேகப் படாரன் என்பான் இக்கோயிலில் ஒரு அம்பலத்தை எடுப்பித்தானென்றும், அதில் நாளும் ஸ்ரீ மகா பாரதம் வாசிக்கப் பெரும்புலியூர் சிங்கிநந்தீசுவர பட்டனுக்கு இறையிலியாக இவ்வூர்ச் சபையார் 53-ஆம் குடும்பிலுள்ள ஒரு பங்கு நிலத்தைக் கொடுத்தார்களென்றும் கூறப்பட்டுள்ளது.
A. R. No. 63 of 1897)

சென்ற இரண்டாண்டுகளில் ஓய்வு கிடைத்தபோதெல்லாம் செந்தலையையும் அதனைச் சார்ந்த பகுதிகளையும் யான் சென்று ஆய்ந்து வந்தபோது இப்பாரத மண்டபத்துள் ஒளித்துவைக்கப் பட்டதைப்போல் இரண்டு கல்வெட்டுகள் இருப்பதைக் கண்டேன். அவை இதுவரையில் காட்சிக்குப் புலப்படாதவைகளாகும். இக்கல்வெட்டுள் ஒன்று இம்மண்டபத்துள் தென்கிழக்கு மூலையாக இராசகோபுரத்தின் வடபுறத்தில் அடைவுகொள்ளும் மதிற் சுவரின்மேல் பத்தடி உயரத்தில் உள்ளதாகும். இவ்வம்பலப் பகுதியில், நாட்டில் வாழ இடமில்லாதார் நாளும் இடங்கொண்டு உணவட்டிய அடுப்பினின்றும் எழுந்த புகை மண்டி ஒரே கருமையடைந்துளது. அம் மையடைவில் மறைந்துள்ள கற்களுள் ஒன்றாகவே இக்கல்வெட்டு தலைகீழ் இருக்கின்றது. இக்கல் இரண்டடி மூன்றங்குல நீளமும், ஓரடி நான்கங்குல அகலமும் உடையதாகும். இதன் முதற் பகுதி மட்டமாக இருப்பதால் எழுத்துக்கள் பெரிய வடிவில் தெளிவாகவும், பிற்பகுதி சற்றுக் குழிந்தும் தேய்ந்தும் இருப்பதால் எழுத்துக்கள் இடத்திற்கேற்பக் குறுகியும் சிதைந்தும் உள்ளன. மைப்படியில் முதற்பகுதி தெளிவாக அமைந்துள்ளது.

கல்வெட்டு வருமாறு :— (திருக்கருப்பூர் கல்வெட்டு)

"ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜகேசரி வர்மர்க்கு யாண்டு உ ஆவது எரியிநாட்டு (ஆ)ப்பிகுடி நடுவிற் கூற்று நாட்டி நக்கனுள கண்டராதித்த முத்தரய டெ...கு ஆற்காட்டுக் கூற்றத்து மீபிரம்பித் திருக்கருப்பூர் ஸ்ரீ கொயிலில் ஸ்நபந மண்டப அஹில மண்டலாதித்த சுத்த...த்த தெவர்பெர் இம்மண்டபம் இரண்டு கரையில் கெங்கெக் கரைத்தர்க்கெகு வலம்... திதன் . . ச . . வுக்கன் ...அ அதாணிக்கு பகல் விளக்கு...கரு . . நில . . ஆழ வைத்து ...... சக்கறம் இம்மூலதனம்"

மற்றும், இப்பாரத மண்டப வாயிலின் வலப்புறமிருந்து உள்நோக்கி நிற்கும் தூண்களின் வரிசையில் ஆறுவது தூணை யடுத்துள்ள இடத்தின் மேல் விதானத் துலாவாக, ஒரு கல்வெட்டுள்ள தூண் பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தூண் நியமம் ஆயிரந்தளியில் விளங்கிய கோயிலைச் சார்ந்தது. இக்கல்வெட்டை ஏணியின் உதவியால் படியெடுக்க முடிந்தது. [இச்செயலுக்கு மிகவும் ஆர்வமுடன் உதவிய கோயிற்கண்காணிப்பாளர் திரு. கே. சிதம்பரம் பிள்ளை அவர்களையும், மாணவர் வி. சொக்கலிங்கம் என்பாரையும் குறிப்பிடாமலிருப்பதற்கில்லை.]

கல்வெட்டு வருமாறு:— (நியமம் ஆயிரந்தளி கல்வெட்டு)

"ஸ்வஸ்திஸ்ரீ கொவிராஜகெசரி வற்மற்கி யாண்டு ௩-ஆவது ஏ(ரி) யினுட்டு ஆட்டுப்பள்ளி நியமத்து சகஸ்ரலிங்கேஸ்வரத்து மகாதெ ...தொட்டப்பாழாய...இலூர் வியாபாரி அரைசூருடையாந் அரிஞ்சிகெ பெருமாரனுக்கு காணி செய்து குடுத்த நிலத்துக்கு எல்லை கிழ்பாற் கெல்லை பரகார்ய மங்கலத்து எல்லைக்கு மெற்கும் தெற்பாற் கெல்லை கிழக்கொடி வாக்காலுக்கும் கறடி கெச்செய் மும்மா வரைக்கு வடக்கும் மெல்பாற் கெல்லை ஸ்ரீ கொயிலின் அடைந்த கிழெதிரு..."

செந்தலைச் சிவன் கோயிலில் நியமத்திலிருந்த பிடாரியார் கோயில் தூண்கள் மட்டும் இடம் பெற்றுள்ளதாக இதுவரை கூறப்பட்டு வந்தது. இக்கருத்து சரித்திரத்தின் இயல்பாக வளர்ந்து "அத்துடன் திருக்கருப்பூர், நியமம் ஆயிரந்தளி, ஸ்ரீ கண்டபுரம் ஆகிய இடங்களில் சிறந்து விளங்கிப் பாழ்பட்ட கோயில்களின் பகுதிகளும் பாறைகளும் இடம் பெற்றுள்ளன" என்பதை மேற் குறித்த கல்வெட்டுகள் உள்ள கற்களாலும், முறையின்றிய நிலையில் ஏதோ சில சொற்றொடர்களுடன் காணப் படும் கல்வெட்டுத் துண்டுப் பகுதிகள் ஆங்காங்கு கோயிலினுள் இடம் பெற்றுள்ளதாலும் நன்கு அறியலாம். மேலும் இக் கோயிலின் இராசகோபுரம், திருச்சுற்று மாளிகை, தூண்கள் ஆகிய பகுதிகளிலெல்லாம் சமண தீர்த்தங்கரர்களின் வடிவுடன் கூடிய பல்லவர்காலச் சிற்பச் சுவடுகள் காணப்படுகின்றன. இது பற்றி அறிஞர் ஆய்தல் வேண்டி, உரிய சில படங்களுடன் "தஞ்சை செய்திக் கதிர்" என்னும் தாளில் 6—9—57-ல் கட்டுரை யொன்று எழுதியுளேன்.

மற்றும், இக்கோயில் இராசகோபுர வாயிலின் முன்பக்கமாக இருபுறமும் ஒன்றி எழுந்த பாங்கில், எட்டடி உயர உபான வரிசையின்மீது பிற்காலத்தில் ஆவரண மண்டபங்கள் அமைக்கப் பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றின் முன்னும் இணையாக எழுந் துள்ள தூண்களின்மேல் கோபுரத்தைச் சார்ந்து விதானம் அமைக்கப்பட்டுள்ளது. தூண்களின் மீதுள்ள துலாக்கல் சிற்ப அடைவுடன் கூடிய எட்டுப் பட்டைகளோடு கல்வெட்டுடன் விளங்கும் தூண்களாகும். முகப்பட்டையுடன் ஓர் உத்திரக்கல் இடவேண்டிய இடத்தில் சிதைந்த கோயிலிலிருந்த தூண்களைச் சுண்ணச் சாந்திற் பதிவு செய்து பயன்படுத்தப்பட்டுளது. இக் கல்வெட்டுகளைப் படியெடுத்தற்குப் பெருமுயற்சி வேண்டியுளது. இது அரசாங்கமே செய்தற்குரித்து.

இக்கட்டுரையில் முதலாவதாகக் கூறப்பெறும் கல்வெட்டிற் காணும் திருக்கருப்பூர் என்பது, செந்தலையைச் சார்ந்து கிழக்கே உள்ள ஊராகும். இது இப்பொழுது கருப்பூர் என்றே வழங்கப் படுகிறது. இவ்வூரின் கீழ்புறமாக குடமுருட்டியாற்றின் தென்கரை யில் பெரிய அளவில் நின்ற கோயிலொன்று சிதைந்து கருவறை மட்டும் விமானமின்றிய நிலையில் பிளவுகளோடு கலகலத்து நிற்கும் காட்சியை இன்றும் காணலாம். இவ்வூரின் ஒரு பகுதி யாகவுள்ள இலிங்கத்திடல் என்னும் மேட்டுப்பகுதியை திரு. T. V. கோபிநாதராயரவர்கள் மூன்று திங்கள் முயன்று ஆங் காங்கு அகழ்ந்து ஆய்ந்ததாகத் தக்கார் கூற வறிந்தேன். அவ் வாராய்ச்சியின் முடிபாக அவர் பெற்ற வரலாற்றுப் பயனை அறிந்திலேன்.

இத்திருக்கருப்பூரைச் சார்ந்து கிழக்கே உள்ளது நடுக் காவேரி என்னும் சிற்றூராகும். இங்குள்ள சிவன்கோயிற் கரு வறையில் நுழைவாயில் மேற்சட்டமாக அமைந்துள்ள கல் கீழே யுள்ள சட்டங்களோடு ஒன்றாத துண்டுக் கல்லாகும். இதில் தலைப்பும் முடிபும் இன்றிய நிலையில் "வறக்கூற்றத்து ஸ்ரீபராந்தக சதுர்வேதி மங்கலத்து | தேவ கிரம வித்தன்நில விலைகொண்ட | ஸ்ரீ ஸஸ்ரதேவ மங்கலத்தில் விலைகொ | ஆதித்த வதிக்கு மேற்கு கணபதி | " என்ற சொற்றொடர்கள் காணப்படுகின்றன.

இத்துண்டுக் கல்வெட்டைக் காணும்போது, 'எரிந்த வீட்டில் எஞ்சியது இலாபம்' என்னும் பழமொழிபோல் திருக்கருப்பூரில் சிதைந்து கிடக்கும் கற்றளியின் பகுதிகள் ஆங்காங்கு கோயில் களைப் புதுப்பித்தற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளனவோ என்று வியப்புற வேண்டியுளது.

ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர், சைவ சமணப் பூசல்களுக் குரியதாக நியமம், செந்தலை, திருக்கருப்பூர், அடுத்துள்ள பூந் துருத்தி போன்ற பகுதிகள் இடம் பெற்றிருந்தன. சமயத்தை நிலைநிறுத்தும் முயற்சியின் பயனாய் உருவிழந்தும் சிதைந்தும் போன கோயில்கள் பலவாகும். அவற்றைப் பிற்கால மன்னரும் மண்டலத் தலைவரும் எஞ்சிய பகுதிகளைக்கொண்டு விரும்பிய வகையில் கற்றளியாகவும், மண்டபங்களாகவும் நிறுவியுள்ளனர். இக்கருத்தைச் செந்தலையிற் சேர்ந்துள்ள கல்வெட்டுகளால் ஒருவாறு அறியவியலும்.

தமிழில் தாவரம்.

கு. சீநிவாசன், M. Sc., தாவர விரிவுரையாளர், அண்ணமலைநகர்.

பிண்டி

பண்டையத் தமிழ் நூல்களில் கூறப்படும் பிண்டி, செயலை என்பன அசோகு என்ற மரத்தைக் குறிப்பனவாகும். இந்தியா, பர்மா, மலேயா, இலங்கை முதலிய நாடுகளில் மட்டும் சிறப்பாகக் கர்ணப்படும் ஒரு சில தாவரங்களுள் பிண்டி மரமும் ஒன்று. இது நிலப் பரப்பிற்கு மேல் சற்றேறக்குறைய இரண்டாயிரம் அடி உயரம் வரையிலுள்ள மலைப்பாங்கில் செங்குத்தாகக் கிளைத்து வளரும், சிறு மரம். "மணிகெழு நெடுவரை அணிபெற நிவந்த, செயலை" (நற். 244) எனத் தமிழ்ப் புலவரும் கூறுவர். இதனை அசோக மரம் (Ashoka tree) என்றே ஆங்கிலத்திலும், வட இந்தியாவிலும் அழைக்கின்றனர். இதனுடைய தாவரப் பெயர் சராக்கா இண்டிகா (Saraca Indica, Lin.) என்பது. இந்திய நாட்டில் பெரிதுங் காணப்படும் சிறப்புப் பற்றியே இதன் வகைப் பெயர் (Specific name) இண்டிகா எனப்பட்டது. இது புளி, கொன்றை, ஆவாரை முதலிய வற்றைக் கொண்ட சிசால்பினே (Caesal pineae) என்ற தாவரக் குடும்பத்தைச் சார்ந்தது. சராக்கா (Saraca) என்ற இவ்வினம் (Genus) ஆறு வகைகளை (Species) உடையதாய் நமது இந்திய நாட்டில், நடுவிலிருந்து கிழக்கு இமயம் முதலாகத் தென் தமிழ்நாடு வரையிலும், ஜாவா, சுமத்திரா முதலிய கிழக்கிந்தியத் தீவுகளிலும், இலங்கை, மலேயா, பர்மா முதலிய நாடுகளின் காடுகளிலும் செழித்து வளர்கின்றது. தமிழ் நாட்டில் சராக்கா இனத்தின் ஒரு வகையான இண்டிகா எனப்படும் பிண்டி மட்டும் வளர்கின்றதென்பர் காம்பிள் (Gamble).

இம் மரத்தின் இலை பல்லலகுடையது. சிற்றிலைகள் நான்கு முதல் பன்னிரண்டு வரை காணப்படும். ஒவ்வொரு சிற்றிலையும் குத்துவாள் வடிவினதாய் மூன்று முதல் நான்கு அங்குல நீளமும், தோல் போல் சற்று தடித்துமிருக்கும். இதன் தளிர் மிக அழகு வாய்ந்தது. மாந்தளிர் போன்ற நிறமுடையது. 'ஊட்டி யன்ன ஒண்டளிர்ச் செயலை' (அக. 68) என்றார் பிறரும். இதனை ஆடவரும் மகளிரும் காதில் செருகிக் கொள்வது வழக்கம்.

வண்காது நிறைந்த பிண்டி ஒண்டளிர் (திருமு. 31)

செவ்வரைச்

செயலைத் தண்டளிர் துயல் வருங் காதினன் (திருமு. 207)

என்பனவற்றால் முறையே சூரர மகளிரும் குன்றுதோறாடும் முருகப் பெருமானும் அணிந்தமை காணலாம்.

செந்தீ

ஒண்பூம் பிண்டி ஒரு காது செறீஇ (குறிஞ். 119)

சுடுநீர் வினைக்குழையின் ஞாலச் சிவந்த
கடிமலர்ப் பிண்டி தன்காதில் செறீஇ (பரி. 12.88)

சாய்குழைப் பிண்டித் தளிர் காதில் தையினுள் (பரி. 11,95)

என்பனவற்றேடன்றிச் சாகுந்தல நாடகத்தின் முதலங்கத்தில் இயற்கை நலனைப் புகழும் பாடினி,

விரியும் மணமவிழ்க்கும் மலர்முகிழ் மேலெல்லாம்
கரிய வரிவண்டு முத்தமிடல் காணாய்
எரியுந்தளிர்ப் பிண்டி இணர்க்கிள்ளி ஒட்டும்
கரியவிழி மாதர் காதிடலுங் காணாய்

என்றுளென மறைமலையடிகளும் மொழிபெயர்ப்பாராயினர்.

"செவ்வரைச் செயலை" எனும் நக்கீரர் கூற்றுக் கேற்ப இதன் அடிமரம் செம்மை கலந்த பழுப்பு நிறமானது. மிக வன்மையுடையது. ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பூக்கும். பூவிணர் நல்ல செந்நிறத்துடன் கொத்துக் கொத்தாக இருக்கும். இதனை,

எரி அவிர் உருவின் அங்குழைச் செயலை (குறிஞ். 105)
பல்பூம் பிண்டி (குறிஞ். 88)
செந்தீ ஒள்பூம் பிண்டி (மதுரை. 701)
கன்றெரி ஒள்ளிணர்க் கடும் பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி (மலைப. 160)

என்றெல்லாம் இதன் செம்மலர் தமிழிலக்கியத்தில் பயிலப்படுகின்றது. ஒரு சிலர் நெட்டிலிங்கமரத்தை (Polyalthia longifolia) அசோகு என்பர். இதன் பூக்கள் புறத்தில் பசுமையும், அகத்தே வெண்மை நிறமுடையனவாதலின் அவர் கூற்று பிழையாதல் புலனும்.

பூக்காம்பு அகன்று கால் அங்குல முதல் அரை அங்குல நீளமுடையது. ஐந்து புறவிதழ்களும் (Sepals) செம்மஞ்சள் (ஆரஞ்சு) நிறமானவை. பிண்டிப் பூவில் அகவிதழ்கள் (Petals) இல்லை. கேசரங்கள் (Stamen) பத்தும் புறவிதழைக் காட்டிலும் மூன்று மடங்கு நீளமாகவும் நெருப்புப் போன்ற செந்நிறத்துடனுங் காணப்படும். பூவின் செம்மைக்கு இதுவே காரணமாகும். பூவில் மகரந்தம் (Pollen) அதிகமாக விளைந்து உகுவதுண்டு. வேங்கைப் பூவில் உள்ளவாறுபோல இப் பூவிலும் நாற்பது தாதுப்பைகள் (Pollen sacs) இருத்தலின் எண்ணற்ற தாது உண்டாகின்றது. வேறு சில மரங்களைப்போலாது பூக்கும் நாளிலும் இதன் இலைகள் தழைத்து அடர்ந்திருக்கும். இதனடியில் பூக்கொய்யச் சென்ற மகளிர் தங்கியிருத்தலைக் கபிலர்,

தாதுபடு தண்ணிழல் இருந்தனமாக (குறிஞ். 106)

என மிக அழகாகக் கூறுகின்றார். சென்றவாண்டில் (1958) யான் தாவர மாணவர்களுடன் பங்களூர் தாவரத் தோட்டத்தில் இப் பிண்டி மரத்தடியில் தாதுபட வீற்றிருந்து கபிலரின் குறிஞ்சித் திறம்பேசி

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

நாற்பத்தேழாம் ஆண்டுவிழா

சென்ற இதழ் 16-ஆம் பக்கத் தொடர்ச்சி.

பின்னர், அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாற்றுராய்ச்சித் துறை திரு. S. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் "கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் இராசேந்திரன் செப்பேடுகள்" என்பது பற்றியும், குடந்தை சங்கீதம் திரு. ப. சுந்தரேசன் அவர்கள் "பாலை ஆளத்தி" என்ற பொருள் பற்றியும் சொற்பெருக்காற்றினர்.

கடைசியாக உரையாற்றிய பேராசிரியர் சி. இலக்குவனார் எடுத்துக்கொண்ட பொருள் "முதல் மொழிநூற்புலவர்" என்பதாகும். இம் முதல் மொழிநூற்புலவர் தொல்காப்பியரே என்று தொடங்கித் தொல்காப்பியர் இலக்கண ஆசிரியர் மட்டுமன்றி, ஒரு பெரிய மொழித்துறை அறிஞருமாவர் என்ற உண்மையை விளக்கினார்கள். மேனாட்டாசிரியர்கள் இப்பொழுது கைக்கொண்டுள்ள முறையும் தொல்காப்பியரின் முறையும் ஒன்றாகக் காணப்படுவதாகவும் அகத்தியர் என்றொருவர் தமிழ் நாட்டில் இருந்ததாகவே சொல்வதிற்கில்லை யென்பது K. N. சிவராசர் எழுதிய "தமிழ் நாட்டில் அகத்தியர்" என்ற நூலில் விளக்கமாக அறியக்கிடக்கிறதென்றும் தொல்காப்பியம் திருக்குறளுக்குக் காலத்தால் முற்பட்டதென்றும் குறிப்பிட்டார்கள். மேலும் அவர் உரைத்தன வருமாறு: மொழியப்படுவது மொழி. முதலில் தோன்றியது பேச்சு மொழி. பிறகே எழுத்து மொழி. "ஆதிசிவன் பெற்றுவிட்டான்—என்னை; ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர், வேதியன் கண்டு மகிழ்ந்தே

60-ஆம் பக்கத் தொடர்ச்சி.

செம்மாந்தோம். இப் பூவில் ஒரு சிறிது நறுமணமும் உண்டு. நுகரப்படும் இம் மணத்தாலும், செந்நிற வழகாலும் ஈர்க்கப்பட்ட வண்டினம் பிறமகரந்தச் சேர்க்கைக்கு (Cross Pollination)த் துணை செய்கின்றன. பிண்டியின் வண்ணநொசி எண் (Chromosome number) $2X = 24$ என அட்சீசன் (Atchison) என்பவர் 1951-ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார்.

இனி வேங்கை மரச்சினையில் தொடுத்து மகளிர் ஊசல் ஆடுதல் போல (நற். 368) பிண்டி மரத்திலும் ஊசலிட்டு ஆடி மகிழ்வர் என்பது,

அந்தளிர்ச் செயலைத்
தாழ்வில் ஓங்கு சினைத் தொடுத்த வீழ்கயிற்று
ஊசல் மாறிய மருங்கும்...... (அக. 38)

ஒண்டளிர்ச் செயலை
ஓங்குசினைத் தொடுத்த ஊசல்...... (அக. 68)

என வருவனவற்றால் அறியக் கிடக்கின்றது.

நிறை—மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்" என்பதெல்லாம் மொழி நூற்கு முரண்பாடு. சொற்றொடர்க்குப் பின் சொல் உண்டாயிற்று; அதன் பின்னர் ஒலி பிரிக்கப்பட்டது. எழுத்ததிகாரம் என்பது ஒலியியல். முதலில் சொற்றொடராகிய மொழிமரபும் பிறகு சொல்லதிகாரமும் கூறப்பெறுகின்றன. எழுத்துக்கள் தமிழிலும் வடமொழியிலும் உருவத்தில் ஒத்தனவாகக் காணப்படுகின்றன. இவைகளில் எது கடன் வாங்கியது, எது கடன் கொடுத்தது என்று ஆராயின் வடமொழியே தமிழினின்று கடன் வாங்கியதென்பது எளிதிற் புலனாகும். "சமஸ்கிருதம்" என்ற சொல்லிலேயே "செய்யப்பட்டது" என்ற பொருள் அடங்கியுள்ளது. இந்திய நாகரிகத்தில் "ஒரு ரூபாவுக்குப் பதினைந்தணா" தமிழ்நாட்டுப் பண்பாடாகும் என்று அறிஞர்கள் ஒப்புக்கொண்டுள்ளார்கள். தமிழில் "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே, அஃறிணை என்மனார் அவரல பிறவே" என்று திட்டவட்டமாகக் கூறப்பெறுகிறது. வடமொழியிலோ "விரல்" பெண்பாலாகவும், "கை" ஆண்பாலாகவும் சுட்டப் பெறும்! தொல்காப்பியத்தில் உலக மொழிகளுக்குப் பொதுவாய பண்புகளே கூறப்பெறுகின்றன. தமிழ் மொழி வளரவேண்டுமெனில் யாவுந் தாய் மொழியிலேயே வருதல் வேண்டும்; கற்பிக்கப் பெறல் வேண்டும்; பல்கலைக் கழக மொழியாதல் வேண்டும். தமிழ் மொழி ஆட்சி மொழியாதல் வேண்டும்; சப்பான் நாட்டில் மருத்துவ முட்பட எல்லாம் சப்பானிய மொழியிற் கற்பிக்கப் பெறுகின்றன. இம்முயற்சியில் நம் நாடு ஆமை வேகத்திற் சென்றுகொண்டிருக்கிறது. தமிழன் எவனும் தொல்காப்பியத்தைப் படிக்காமல் சாவக்கூடாது.

விழாத் தலைவர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தம் முடிவுரையில் தொல்காப்பியம் சங்க நூல்களுக்குக் காலத்தால் முற்பட்டதென்றும், உரைகாரர்கள் தத்தம் காலத்திய பேச்சின் அடிப்படையிற்றான் தொல்காப்பியத்தைக் காண முயன்றிருக்கிறார்களென்றும், உலகிலேயே தொல்காப்பியம் மிக எளிய இலக்கணமென்றும், பிறப்பியலை உரையைக் கிழித்துவிட்டுப் படித்தல் நல்லதென்றும், சப்பான் உட்பட எல்லா நாடுகளும் ஆங்கில மொழி வழியே விஞ்ஞானக்கலை முதலியன பயில்வதாகவும், இதற்குப் புறநடையாக இருப்பது இசுரவேல் என்ற புதிய சிறு நாடொன்றே என்றும், தமிழ் மொழி வாழ்வதோடு தமிழரும் வாழவேண்டுமென்பது தமது விருப்பமென்றும் கூறித் தம் பின்னுரையை முடித்தார்கள்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் ஆண்டு தோறும் அளித்து வரும் நாவலர் பண்டித, ந. மு. வேங்கடசாமி நாட்டார் பொற்பதக்கம் 1958-ஆம் ஆண்டில் பல்கலைக் கழக வித்துவான் தேர்தலில் சென்னை மாநில முழுமையிலுமே முதலாவதாகத் தேர்ந்த கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர் வித்துவான், திரு. இரா. கலியபெருமாள் அவர்களுக்கு அளிக்கப்பெற்றது. புலவர் கல்லூரியின் மற்ற வகுப்புகளில்

முதன்மையாகத் தேர்ந்தவர்களுக்கு அரசர் வீரத்திரு. அண்ணாமலை செட்டியார் பரிசுகள் வழங்கப்பெற்றன.

கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்கள் அன்றிரவில் வித்துவான் ச. பாலசுந்தரனார் இயற்றிய "ஆதி மந்தி" என்ற செய்யுள் நாடகத்தை நடித்து மகிழ்வித்தனர்.

அருணாசல நிலையம்.

நம் கரந்தைத் தமிழ்ச் சங்கம், புலவர் கல்லூரி, உயர் நிலைப்பள்ளி, தொடக்கப் பள்ளி ஆகிய மூன்று கல்வி நிலையங்களுடன் திக்கற்ற மாணவர் இல்லம் ஒன்றையும் பல ஆண்டுகளாக நடத்தி வருவது தமிழகம் அறியும். இந் நிறுவனங்கள் தக்க, போதிய, கட்டிடங்களில் லாமையால் இடர்ப்படுவதறிந்து, உளனெகிழ்ந்த தமிழ்ப் பேரன்பரும் சங்க உறுப்பினருமான சென்னை அருணாசலப் படப்பிடிப்பு நிலைய உரிமையாளர் திரு. அ. கு. வேலன் அவர்கள் ரூ. 30,000க்கு மேற் பெறுமான ஒரு கெட்டிக் கட்டிடம் அமைக்க உதவினார்கள். இக் கட்டிடம் திரு. வேலனாரின் அருமைத் தந்தையார் திரு. சி. அருணாசல னாரின் நினைவாக "அருணாசல நிலையம்" எனப் பெயரிடப்பட்டு 20—3—59ல் நமது மாநில முதலமைச்சர் திரு. K. காமராசர் அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது.

கட்டிடத் திறப்புவிழாவிற்கு, திரு. வேலன் அவர்கள் குடும்பத் தாரும் உறவினர்களும், படப்பிடிப்பு நிலைய அலுவலர்களும் வந்திருந்து கண்டு கேட்டு மகிழ்ந்தனர். திரு. வேலனவர்களின் வீட்டரசியார் கட்டிட முன் வாயில்களுக்கு மஞ்சள், குங்குமம் அணிவித்தார்கள். வேலனவர்களின் தாயார் இவற்றை எல்லாம் கண்டு 'ஈன்ற பொழுதிற் பெரிதுவந்து' மகிழ்சிறந்தார்கள்.

அது காலை, நம் சங்கத் தலைவர் திரு. ச. சுயம்பிரகாசம் அவர் களின் வரவேற்பு முன்னுரைக்குப் பின் முதலமைச்சரவர்கட்கும் திரு. வேலனார்க்கும் சங்கத்தாராலும், சங்கக்கல்வி நிலையங்களின் ஆசிரியர்க ளாலும் வாழ்த்துப்பாக்கள் படித்தளிக்கப்பெற்றன. திரு. காமராசர் அவர்கட்கு அளிக்கப்பெற்ற சங்க வாழ்த்துப்பாக்கள் கும்மி, குறவஞ்சி, காவடிச்சிந்து போன்ற பழந்தமிழ் முறையில் அமைக்கப்பெற்று, சங்க மாணவியரால் அழகாக ஆடிப் பாடி யளிக்கப்பெற்றதும், திரு. வேலன் அவர்கட்கு அளிக்கப்பெற்ற வாழ்த்துப்பாக்கள் குடந்தை இசைவாணர் ப. சுந்தரேசன் அவர்களால் இராகமாலிகையாகப் பாடப் பெற்றதும் எல்லோராலும் பெரிதும் பாராட்டப் பெற்றன.

முதலமைச்சரவர்கள் இவ் விழாவிற் கலந்துகொள்வதில் தமக்கேற்பட்ட மகிழ்ச்சியையும், சங்கத் தொண்டின் வளர்ச்சியில் தமக்குள்ள பெரு விருப்பத்தையும், தமக்கே உரிய இனிய, எளிய தமிழில் தெரிவித்ததோடு, சற்றுக்குறைய ஐம்பதாண்டுகளாகப் பல இடர்ப்பாடுகளினிடையே சங்கத்தைத் தொடர்ந்துநடத்தி வந்துள்ளோரைப் பாராட்டிப் பொதுமக்கள் நம் சங்கத்துக்கு ஆதரவளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். சென்னை திரு. நாராயணன் அவர்களும், திரு. தெ. துரைராசப்பிள்ளை M.L.C. அவர்களும், திரு. வேலனவர்களின் நல்லுதவியைச் சிறப்பித்துப் பேசிய பின், உணர்ச்சி மேலிட்ட திரு. வேலனாரும் தமது சுருக்கமான உரையில் தமது பரந்த உள்ளத்தைத் திறந்துகாட்டி எல்லோரையும் மகிழ்வித்தார்கள். (திரு. காமராசர், திரு. வேலன் ஆகியோரின் உரைகள் நாடா ஒலிப்பதிவு செய்தபடி சென்ற இதழில் வெளிவந்துள்ளன.)

நண்பகல் 12-மணிக்குப்பின், மங்கல இன்னிசை முழங்கத் தமிழ்ப்பெருங்குடி மக்களின் பேராரவாரத்தினிடையே திரு. K. காமராசர் அவர்கள் வெண்பொற் றிறவுகோலால் அருணசல நிலையத்தைத் திறந்து உள்ளே யமைக்கப்பெற்ற திருவிளக்கினை ஏற்றி வைத்தார்கள். பின்னர் அங்கே அங்கமைக்கப்பெற்றிருந்த திரு. வேலன் தந்தையார் திரு. சி. அருணசலனாரின் உருவப் படத்தையும், திரு. வேலனாரின் உருவப் படத்தையும் திறந்து வைத்தார்கள்.

இவற்றுடன் காலை நிகழ்ச்சிகள் முடிவுற, அன்றிரவு நானூற்றுவர்க்கு மேலானவர்க்குப் பெரு விருந்தளிப்பும், குடந்தை இசைவாணர் ப. சுந்தரேசன் அவர்களின் இன்னிசை விருந்தும் நிகழ விழா இனிது நிறைவேறியது.

இவ் விழா சிறப்பாக நடைபெறுதற்குப் பொருளுதவியதுடன் உழைப்பையு முதவிய திருவாளர்கள் N.S. சொக்கநாதன் செட்டியார் மா. ந. கொண்டல் நாயுடு, R. வேங்கட நாராயணன், மா. கோவிந்தராசன், ந. லெ. வரதராசலு நாயுடு (சங்கப் பொருளாளர்) முதலிய பல வணிகப் பெருமக்கட்கும், திரு. அ. கைலேகுரு அவர்கட்கும் சங்கத்தார்கள் உளமார நன்றி செலுத்துகிறார்கள்.